REGISTERED AT THE G.P.O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னுகம், சர்வதாரி தை ௧௦ (காந்தி ஆண்டு 80) 23-1-'49, ஞாயிறு | இதழ் 25

**பயிற்சிமூலம் பாஷைத் தேர்ச்சி**

**ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா,**
(M. A., M. LITT.)

பாடசாலை மாணவர்களின் உபயோகத்துக் கேற்றவிதமாக வித்தியாதரிசினி ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா அவர்களால் உகந்தமுறையில் எழுதப்பட்டது. சிறந்த வசனப் பகுதிகளையும், திருக்குறள், நீதிநெறிவிளக்கம், பாரதிபாடல் முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப் பெற்ற செய்யுள்களையும் கொண்டது.

விலை ரூ. 1-75 தபாற்செலவு வேறு.

தனலக்குமி புத்தகசாலை : சுன்னுகம்

# புதிதாக எழுந்த ஆபத்து

## ஆசியா இனி அடிபணியாது

**"எமது சகோதர நாடு ஒன்றின் சுதந்திரம் பறிபோகின்றபடியாலும், உலகினைப் புதிய முறையிலே அமைப்பதற்கான சகல நற்சக்திகளுக்கும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாலும் நாம் இன்று இங்கு கூடியுள்ளோம்.**

**"மங்கி மறைந்துவரும் ஒரு பழைய ஏகாதிபத்தியம் மீண்டும் தலைதூக்கி நிற்பதால் நாங்கள் ஒன்று கூடுவது அவசியமாகிவிட்டது."**

இவ்வாறு இந்தியப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு சென்ற வியாழனன்று புது டில்லியிற் கூடிய ஆசிய மகாநாட்டைத் திறந்து வைக்கும்போது குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசியதாவது: இந்தோனேஷியாவிற் சமாதானத்தை நிலைநாட்டி அந்நாட்டுமக்கள் சுதந்திரம் பெறுவதற்கான யோசனைகளை ஐக்கிய நாடுகள் சங்கத்துப் பாதுகாப்புச் சபைக்குச் சமர்ப்பிப்பதே இம் மகாநாட்டின் முக்கிய குறிக்கோளாகும். இம்மகாநாட்டிற் பங்குபற்றும் 19 நாடுகளும் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் அதிகார வரம்பிற்கு உட்பட்டே கூடியுள்ளன. ஒரு நாட்டுக்கோ அன்றேல் வேறு சில நாடுகளுக்கு எதிராகவோ நாங்கள் இங்கு கூடவில்லை. இம் மகாநாடு வகுப்பு ரீதியாக இந்தோனேஷிய விவகாரத்தைப் பரிசீலனை செய்யவில்லை யென்பதையும் தெளிவாக எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

ஏகாதிபத்திய இரும்புக் கரங்களினின்றும் விடுதலைபெற்றுப் புதுமலர்ச்சியுற்றுவரும் ஆசியாவுக்கு ஆபத்து விளைக்கக்கூடிய வகையில், இன்று அடிவானத்தில் ஒரு சவால் தோன்றியுள்ளது. பொதுமக்களின் உயர்ந்த இலட்சியமாகிக்கொண்ட ஒரே உலகத்தின் சின்னமாகப் பரிணமித்துள்ள ஐக்கியநாடுகள் ஸ்தாபனந்தானும் மதிக்கப்படவில்லை. அது நிறைவேற்றிய தீர்மானங்கூடப் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. இன்று எழுந்துள்ள இச் சுவாலைக்கு நாங்கள் தகுந்த பதில் கொடுக்கத் தவறுவோமாயின் இந்தோனேஷியா மட்டுமன்றி, ஆசியாவும் அதனுடன்சேர்ந்து அகில உலகமுமே பாதிக்கப்படுமென்பதற்கு எவ்வித சந்தேகமுமில்லை.

பிறர் தயவை எதிர்பார்த்து இதுவரை ஏனையோரின் கைப்பொம்மையாக விளங்கிய ஆசியா இனி, பிறர் அதன் சுதந்திரத்திலே தலையிடுவதைப் பார்த்துக்கொண்டு அது சும்மா இருக்கப்போவதில்லை.

பர்மாவின் கல்வி மந்திரியும், பிலிப்பயின் பிரதிநிதி ரோமுலோ அவர்களும் பேசிய பின்னர், இலங்கைப் பிரதிநிதி, மந்திரி பண்டாரநாயகா பேசுகையிற் குறிப்பிட்டதாவது: "இன்று தவறு ஏதாவது நடைபெற்றிருக்கிறதா என்பதுபற்றி ஆராய வேண்டிய அவசியமேயில்லை. மாபெருந் தவறு ஒன்று நிச்சயமாகவே இழைக்கப்பட்டுள்ளது. ஆகவே அதை நிவிர்த்தி செய்வதற்காகவே நாங்கள் இன்று கூடியுள்ளோம்."

### நேருஜீ சேவை

பிலிப்பைன் கோஷ்டித் தலைவரான ஸி. ரோமுலு அவர்கள் புது டில்லியில் ஆசிய மகாநாட்டைப்பற்றி 17-ந் திகதி குறிப்பிட்டதாவது:

"இம்மகாநாடு ஒரு சரித்திரப் பிரசித்தி பெறப்போகிறது. ஏனெனில் இம்மாதிரி ஒரு மகாநாடு இன்றுதான் முதல் தடவை கூடிற்று. 1947ஹூல் பண்டித ஜவஹர்லால் நேரு ஒரு அகில ஆசிய மகாநாட்டைக் கூட்டினர். அதற்கேற்ப அடுத்த காரியமாக இது இருக்கிறது. அன்று கூடிய மகாநாடு அரசாங்கத் தொடர்பற்ற மகாநாடு. ஆனல் இன்று கூடும் மகாநாடோ ஆசியா மக்களையும் அரசாங்கங்களையும் ஒன்று சேர்க்கும் தொடர்புள்ள ஒரு முயற்சி. இது ராஜதந்திரத்தின் துணிவு நிறைந்த ஒரு முயற்சியென நான் கருதுகிறேன். ஏனெனில் உலகத்தில் இந்தப் பாகத்தில் இருப்பவர்கள் சமாதானத்தை நிலைக்கச் செய்ய இது ஒரு பலன் தரத்தக்கவல்ல சாதனமாகும்"

ஜெனரல் ரோமுலு சில தினங்களுக்கு முன் வாஷிங்டனில் இருந்தார். மேற்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம் நகரசபை நடபடி

# சக்தியற்ற யந்திரம்

## யாழ்பொறித்த முத்திரை

**புதிய மேயர் பதவிக்குப்** பின்னர் யாழ்ப்பாண நகரசபையின் முதலாவது கூட்டம் இம்மாதம் 15-ந் திகதி நடைபெற்றது. மேயர் சாம். ஏ. சபாபதி தலைமை வகித்தார். அங்கத்தினர் அனைவரும் பிரசன்னமாயிருந்தனர்.

யாழ்ப்பாணத்து மின்சார நிலையத்து யந்திரம் சக்தியிழந்து வருகின்ற தென்பதைப் பற்றியே அன்றைய கூட்டத்திற் பேசப்பட்டது. வண்ணார்பண்ணை வட்டாரத்துப் பிரதிநிதி ஸ்ரீ ரீ. எஸ். துரைராஜா மின்சார நிலையத்துப் பெரிய யந்திரத்தைப்பற்றிப் பேசும்போது அது முதுகெலும்பில்லாத ஒரு மனிதனைப்போல நின்று அவலப்படுகின்றதெனக் குறிப்பிட்டிருந்தார். நிலைமை மகா மோசமாகிவிட்டதாகவும் வேண்டிய திருத்தங்களை விரைவிற் செய்யாதுவிடின் யாழ்ப்பாணம் இருளில் நின்று தத்தளிக்க வேண்டி நேரிடுமென அவருடைய பேச்சிலிருந்து அறிய முடிந்தது.

பழைய பட்டினசபையினர் 26,000 ரூபாவுக்கு ஒரு யந்திரத்தை வாங்கியிருந்தனர் எனவும், அதில் ஏற்பட்ட வெடிப்புகளைப் பழுது பார்ப்பதற்கு ரூபா 6,000 செலவாயிற்றெனவும் அவர் தெரிவித்தார். ஆகவே கூடிய சீக்கிரத்தில் ஒரு புதிய யந்திரத்தை நகரசபை வாங்கவேண்டுமென்று அவர் சமர்ப்பித்த பிரேரணை சபையில் நிறைவேறிற்று.

இதற்கான பணத்துக்கு அரசாங்கத்திடம் விண்ணப்பம் செய்வதெனவும் சபை தீர்மானித்தது.

காங்கேசன்துறையிலுள்ள பாரிய மின்சார நிலையம் ஏப்ரல் மாதத்திற் தொழிற்படுமெனவும் அப்படியானல் அங்கிருந்து போதியளவு மின்சார சக்தியைப் பெற்றுக்கொள்ளலாமெனவுங் கூறிய மேயர் அதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் இதுவரை செய்யவில்லையெனவும் குறிப்பிட்டார். ஆகவே இதிற் காலதாமதம்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

# பிள்ளைகள் பெருகுதல்

## பிரதிநிதியின் வியாக்கியானம்

20-1-49

**புது வருட விடுமுறைக்குப் பின்னர் இங்குள்ள பள்ளிக்கூடங்கள் மீண்டும் ஆரம்பித்துவிட்டன. புதிதாகச் சேரும் பிள்ளைகளின் தொகை சொல்லுந்தரமன்று. கொழும்புமாநகரிலே அரசினரின் இலவசப் பள்ளிக்கூடங்கள் மிகக் குறைவு. ஆகவே, பிள்ளைகளிடம் கட்டணம் பெறும் பள்ளிக்கூடங்களுக்கு ஒரே அள்ளுகாசும் தென்னம்பிள்ளையுந்தான் !**

இதுதான் தருணமென நினைத்துப் போலும் இப் பள்ளிக்கூடங்கள் கட்டண விகிதத்தையும் உயர்த்திவிட்டன. இலங்கையில் உள்ள அரசினர் மத்திய பாடசாலைகளின் தொகை 54. இவற்றுள் ஆகக்கூடி மூன்று பள்ளிக்கூடங்களே மருதானை, கொட்டாஞ்சேனை, தெகிவலை ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ளன.

இலவசக்கல்வி நடைமுறைக்குவந்து நான்குவருடகாலமாகியும், மத்திய பள்ளிக்கூடங்களிற் போதிய தளபாடங்களோ விஞ்ஞான கூடங்களோ நூல் நிலையங்களோ திருப்திகரமான முறையில் இங்கு காண்பதற்கில்லை.

சில பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான விஞ்ஞான உபகாரணங்கள் வந்து சேர்ந்துள்ளன. ஆனல் இதற்கான கட்டடங்கள் நிறுவப்படாத காரணத்தால் அவை அப்படியே பெட்டிகளுக்குள் பவுத்திரமாகக் கிடக்கின்றனவென அறிகின்றேன்.

### ஏமாற்றம்

சில பள்ளிக்கூடங்களிற் போதியளவு ஆசிரியர்களே இல்லை. தவிர, பாடத் திட்டத்திற்கேற்பச் சில பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்குப் பாடம் சொல்லிக்கொடுப்பதுமில்லையாம்.

கொழும்புமாநகரில் மட்டும் 40,000 மாணவர்கள் உளர். அப்படியிருந்தும் வித்தியா பகுதியினர் போதியளவு மத்திய பாடசாலைகளைக் கொழும்பில் நிறுவுவதற்கான முயற்சியில் இதுவரை ஈடுபடவில்லை. இலவசக் கல்வியைப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்ற பெற்றூர்களுக்கு இது மிகுந்த ஏமாற்றத்தையே கொடுத்திருக்கின்றது.

கொழும்பிலே நிலைமை இப்படியிருக்கின்றது. ஆனல் பிற இடங்களிலுள்ள பள்ளிக்கூடங்களின் தலைவிதியை அறியும்போது சிரிப்புண்டாகாமற் போகாது. இங்குள்ள ஆங்கிலத் தினசரி ஒன்று வெளியிடும் செய்தியின்படி அனுராதபுரத்தில் உள்ள மத்திய பாடசாலையில் இவ்வருடம் புதிய பிள்ளைகள் ஒருவருமே சேரவில்லையாம். இது அனுராதபுரத்திலிருந்து [illegible] தூரத்திற்கு அப்பால் உள்ளது.




குறித்த பள்ளிக்கூடத்தில் ஆகக் கூடி 24 பிள்ளைகளே படிக்கின்றனர். இவர்களுள் பெண்கள் எழுவர். இம்மாதம் இப் பள்ளிக்கூடம் மீண்டும் ஆரம்பமானபோது அங்கு 10 பிள்ளைகளே பிரசன்னமாயிருந்தனர்.

### இன்னும் 10 இலட்சம்

செவ்வாயன்று பிரதிநிதிகள்சபை கூடியபோது அரசாங்கத்தின் கல்விமுறையைப் பலரும் நன்ருகத் தாக்கினர். இதில் ஆக வேடிக்கை யாதெனின் மேலதிகமாகப் பள்ளிக்கூடங்களை அமைப்பதற்குக் கல்வி மந்திரி 3 இலட்சம் ரூபா வேண்டிநின்றூர். சபை இதற்கு இணங்கியவுடன் மந்திரி மேலும் 7 இலட்சம் வேண்டுமென்றூர். எதற்காக எனப் பலரும் இரைந்தபோது பள்ளிக்கூடக் கட்டடங்கள் அமைப்பதற்கென அவர் குளிர்மையாகப் பதில் இறுத்தார்.

இத்தனைக்கும் எதிர்க்கட்சியினர் கூறிய வார்த்தைகள் நல்ல முறையிலேயே அமைந்திருந்தன. ஆக்கவேலைக்குகந்த யோசனைகளையே அவர்கள் அன்று தெரிவித்தனர்.

[illegible]ருவான்வெலப் பிரதிநிதி மத்திய பாடசாலையென்றூல், அது என்னமாதிரி இருக்குமென அறிய விரும்பினூர். அதற்குச் சாவகச்சேரிப் பிரதிநிதி அளித்த வியாக்கியானம் வருமாறு: "மத்திய வித்தியாசாலையென்ருல் அது ஒரு நீளமான மண்டபம். அங்கு வாங்குகளோ மேசைகளோ கிடையாது. சில மாணவர்கள் மாத்திரம் கல்வித் தாகத்தைத் தீர்த்துக்கொள்ளுவதற்காக அவலப்படுவார்கள். இவர்களின் தாகத்தைத் தீர்ப்பதற்கு அங்கு உபாத்தியாயர் ஒருவர்தானும் இருக்கமாட்டார்."

### மசோதாவில் மாற்றம்

வியாழக்கிழமை (20-1-49) சபை கூடும்போது இந்தியர் பிரஜா உரிமையில் ஒரு சிறு மாற்றம் ஏற்படும். இது பெயர் பற்றிய மாற்றம். அதாவது **இந்தியர்** என்பதற்குப் பின்னல் **பாகிஸ்தானியர்** என்ற பதமும் சேர்க்கப்பட வேண்டுமென பிரதமர் ஸ்ரீ சேனநாயகா ஒரு திருத்தத்தைச் சபையிற் சமர்ப்பிப்பார். இது நிறைவேறுவதில் எவ்வித சங்கடமும் இருக்கமாட்டாது. அத்துடன் முஸ்லீம்களுக்கும் பெருமை ஏற்படுகின்றதல்லவா?

இந்திய பிரஜா உரிமை மசோதா மூன்ருவது முறையாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கு முன்னதாகப் பழையமந்திரி ஸி. சுந்தர

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியருக்குக் கடிதம்

# சட்டம்ஒன்று அவசியம்

புதுவருடம் பிறந்துவிட்டது. பாடசாலைகளின் வகுப்பேற்றப் பரீட்சையும் முடிந்துவிட்டது ஆசிரியர்களும் பயிற்சியின்பின், வெளியேறிவிட்டனர். பாடசாலைகளில் இடம் கேட்டு அதிருப்தியும் அடைகின்றனர். பாடசாலைகளில் ஹரிஜனர்களைச் சேர்த்ததால் ஏற்பட்ட கஷ்டங்களை யாம் அறிந்துள்ளோம், சிலபாடசாலைகளில் மாணவர் தொகை குறைந்துள்ளது. தீண்டாமை விலக்கு நன்மைபயக்கும் என எண்ணியுள்ளோர் பலர் பாடசாலைகளில் ஹரிஜனங்களைச்சேர்த்ததால் அல்லலுறும் ஆசிரியர்களை எண்ணித் துக்கப்பட வேண்டியிருக்கிறது. இப்படிச் சேர்த்ததை ஒரு காரணமாகக்கொண்டு சில அறிவற்றவர்கள் ஒரு பாடசாலையிற் படிக்கும் மாணவர்களை மற்றோர்பாடசாலைக்கு மாற்றி விடுகின்றனர். ஒரு விஷயமுமறியாப் பாலர்களின் பெற்றோர்களிடம் சென்று அவர்களின் பிள்ளைகளை மறித்து வேறுபாடசாலைக்கு விடும்படி தூண்டுகின்றனர். இதனால் ஒரு பாடசாலையின் சராசரி திடீரெனக் குறைகிறது. இதைச் சாட்டாகக் கொண்டு வேலையற்றிருக்கும் ஆசிரியர்கள் தன் ஊர்ப் பாடசாலைக்குத் தீங்குசெய்கின்றாரென்பதையும் எண்ணாது பிறஊர்ப் பாடசாலைக்குப் பிள்ளைகளைச் சேர்த்து இடம்பெற முயற்சிப்பது சிரிப்புக் கிடமானதே. கல்வி யென்பது யாவருக்கும் சொந்தமானது. சகல சாதியினரும் ஒருமித்துக் கற்பது பிழையன்று. சாதிமான் எனக் கருதும் ஒருவர் தன் மகன் படிக்கும் பாடசாலையிலே தாழ்ந்தசாதி மகன் படிப்பதை விரும்புகிறாரில்லை. ஆனால் தாழ்ந்தசாதி மக்கள் சிலர் ஒழுக்கத்திற் கூடியவர்களாக இருக்கிறார்களென்பதையும் மறுக்கிறார்களில்லை. அன்றியும் ஒரு கிணற்றை வெட்டுவது யாரென அறிவோம். வீடு கட்டுவது யாரென அறிவோம். இப்படி வெட்டப்பட்ட கிணற்று நீரை யாம் பின்பு பருகுகின்றோம். ஹரிஜனங்களாற் கட்டிவிடப்பட்ட வீடுகளில் குடிபுகுகின்றோம். பரீட்சைகள் நடைபெறும்பொழுது பலசாதி மக்களும் ஒரே மண்டபத்திலிருந்து விடை யெழுதுகிறார்கள். இவற்றை யோசியாது ஹரிஜனங்கள் ஒருமித்து இருந்து படிப்பதை வெறுக்கும் சாதிமான்களை என்னென்று கூறுவது. பலவருட காலமாக நிலவிவரும் ஒரு பாடசாலையின் சராசரியைக் குறைத்துச் சில ஆசிரியர்களுக்கு அங்கே இடம் இல்லாது செய்துவிட்டால் தங்கள் கொள்கைகள் சரியென நிரூபிக்கப்பட்டு விட்டதென எண்ணுவது தவறு. அன்றியும் ஒரு பாடசாலையிலுள்ள பிள்ளைகளை மறுபாடசாலைக்குச் சேர்ப்பதால் அங்கே சராசரி கூடினும் உடனே அந்த ஆசிரியருக்கு அங்கே இடம் கிடையாது. இப்படி மாணவர்களை மறிப்பவர்களையும், ஹரிஜனங்கள் படிப்பதால் அப்பாடசாலையை விட்டு வேறு பாடசாலைக்குத் தங்கள் பிள்ளைகள் செல்லவேண்டும் என விரும்பும் பெற்றோர்களையும் தண்டிக்கக் கூடிய சட்டம் ஒன்றைக் கல்வி அதிகாரி ஆக்க வேண்டும். இதை வடமாகாண ஆசிரியசங்கம் யோசித்து ஆவன செய்யவேண்டும் எனத் தாழ்மையாக வேண்டுகின்றேன்.

அளவெட்டி 5-1-49. சிவகுமாரன்







சிறந்தபலனுக்கு

C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்களால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு
கொம்மேர்ஷல்
கொம்பனி
லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றிய விபரங்களுக்கு உடனே எழுதவும்.

The
Colombo
Commercial
Company
LIMITED.

INCORPORATED IN
GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3501)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப் பலிக்கு இடமில்லாத அரங்கம்........

# சதுரங்கம்

ருஷியாதேசத்து அதிபதியாகிய ஸ்டாலினின் அறுபத்தொன்பதாம் பிறந்த தினத்தின்போது (சென்றுண்டு டிசம்பர் இறுதியில்) ருஷிய மக்களும் வடதுருவவாசிகளுமான எஸ்கிமோ ஜாதியினரும் அவருக்கு ஒரு சதுரங்கப் பலகையையும், ஆட்டத்துக்கு வேண்டிய காய்களையும் பிறந்த நாட் காணிக்கையாக அனுப்பினராம். இந்தச் செய்தியைப் பிரசுரிக்கையிற் சென்னை ஹிந்துப் பத்திரிகையானது "யுத்தப் பித்து முற்றிவரும் இந்நாளில், உலகத்தில் இரண்டு வல்லரசுகளாக விளங்கி வரும் ருஷியாவும் அமெரிக்காவும் உயிருள்ள பிராணிகளான மனித வர்க்கங்களைக் கொல்ல விரும்பாமல், இந்தச் சதுரங்கக் காய்களை வெட்டியுங் குத்தியும் தங்களது ஆத்திரங்களைத் தீர்த்துக்கொள்ளக் கடவர் என்னும் நோக்கத்துடனேயே எஸ்கிமோக்கள் இந்தக் காணிக்கையை அனுப்பி யிருக்கலாம்" என யூகித்து எழுதியது.

## இதன் கதை

இந்தச் சதுரங்க ஆட்டமானது, உலகத்திற் பல நாடுகளிலும் தொன்றுதொட்டு ஆடப்பட்டு வருகின்றது. உதாரணமாக, கி. பி. பதினைந்தாம் நூற்றுண்டில், மலையாள இராச்சியத்தில் (தென்னிந்தியாவில்) கோலாத்திரி நாட்டில் (தலைச்சேரிப் பிராந்தியத்தில்) அரசு புரிந்துவந்த உதயவர்மனும் அவனது மனைவியும், அவர்களது ஆதரவு பெற்ற செருசேரி நம்பூதிரி என்பவரும், இந்த ஆட்டத்தில் அதி நிபுணர்களாக விளங்கி வந்தனர் என்பது சரித்திரப் பிரசித்தம். இந்த ஆட்டமே மலையாள மொழியிலுள்ள உத்தம கிரந்தமான 'கிருஷ்ணன் பாட்டி'ற்கு மூல காரணமாகவிருந்தது எனக் கர்ண பரம்பரை கூறும். ஒரு நாள் உதயவர்மனும் செருசேரியும் சதுரங்கம் ஆடிக்கொண்டிருக்கையில், உதயவர்மன் ஒரு கடினமான கட்டத்தில் அகப்பட்டுக்கொண்டு எந்தக் காயை ஆடவேண்டுமென்று தவிக்கையில், அவர்களுக்குச் சமீபத்தில் தனது குழந்தையைத் தாலாட்டிக் கொண்டிருந்த ராஜபத்தினி, இராஜனது மயக்கத்தை யறிந்து, தாலாட்டுப் பாடிக்கொண்டே "உந்துந்துந்துந்து ஆளை உந்து" (உந்து, உந்து, உந்து, உந்து, ஆளை உந்து) என்று பாட, அதனைக் கவனித்த அரசன்,. ஆளை உந்தி, அந்த விஷம கட்டத்தைத் தாண்டிவிட்டான். அதன்பின் அரசன் இவ்வாறு சமயோசிதமாகப் பாடித் தனக்கு உதவிய தனது பத்தினியை மெச்சிப் பின்பு மகா வித்துவானுகிய செருசேரி நம்பூதிரியை நோக்கி, "உந்து, உந்து, உந்து, உந்து" என்னும் சந்தத்தில் ஒரு காவியம் இயற்றுமாறு வேண்ட, அந்த நம்பூதிரியும் தனது இஷ்ட தேவதையான கிருஷ்ணபகவானைப் பொருளாகக் கொண்ட கிருஷ்ணன் பாட்டு என்னும் கிரந்தத்தை எழுதினுர் என்பது கதை.

## சான்றுகள்

மஹாராஷ்டிர பேஷ்வாக்களில் ஒருவரும் கி. பி. 1795 முதல் 1818 வரை அப்பதவியில் இருந்தவருமான இரண்டாம் பாஜிராவ் என்பவர் இந்த ஆட்டத்தில் மிகுந்த பற்றுள்ளவராக விளங்கியவர். அவர் காலத்தில் இந்த ஆட்டத்தில் அதி நிபுணராக விளங்கிய மஹா வித்துவான் திருவேங்கடசாமி என்பவர் அவரது ஆணைப்படி இந்தச் சதுரங்க ஆட்டத்தை விலாஸ மணி மஞ்சரி என்னும் நூலில் விஸ்தாரமாக விளக்கி எழுதியுள்ளார்.

எஸ். ஆர். அனந்தநாராயணன்

கி. பி பத்தாம் நூற்றுண்டிலும் இந்த ஆட்டம் நமது இந்தியாவில் விசேஷமாக ஆடப்பட்டு வந்தது என்பதற்குச் சான்றாக அக்காலத்தில் இது விஷயமாக இயற்றப்பட்ட ஒரு கிரந்தத்தைச் சொல்லலாம்.

இந்தப் பழைய கிரந்தங்கள் இரண்டும் சிலவருஷங்களுக்கு முன் மஹாராஷ்டிரத்திலுள்ள கொல்லாப்பூரில கண்டெடுக்கப்பட்டன.

இந்த ஆட்டத்தில் ருசியுள்ளவர்கள் ஒரே ஆட்டத்தை இடைவிடாமல் வருஷக்கணக்காக ஆடுவார்கள். நெடுந்தூரத்திலுள்ள தேசங்களில் உட்கார்ந்து கொண்டும் ஆடுவார்கள். ஸ்பெயினில் ஒருவரும் தென்னமெரிக்காவில் ஒருவருமாக இருவர் உட்கார்ந்து கொண்டு இந்த ஆட்டத்தைக் கொஞ்சக்காலம் முன்பு ஆடி வந்ததாகப் பத்திரிகைகள் அறிவித்தன. தவிர ஒரே ஒருவர் ஏககாலத்தில் பலருடன் இந்த ஆட்டத்தை ஆடுவதும் உண்டு. புனவுக்குச் சமீபத்தில் உள்ள ஸங்க்லி வாஸியான காடில்கார் என்னும் வித்வான் ஏககாலத்தில் இருபத்தொரு பெயர்களுடன் இந்த ஆட்டத்தை ஆடுவாராம்!

* * *

ஆங்கிலக் கவியரசராகிய ஷேக்ஸ்பியர் (1564—1616) இயற்றியுள்ள பெரும்புயல் (The Tempest) என்னும் அதி மனோகரமான நாடகத்தில் ஒரு கட்டத்தில், கதாபாத்திரங்களான பேர்டினண்டும், மிராண்டாவும செஸ் ஆடிக்கொண்டிருந்ததாக அவர் எழுதியிருக்கின்றுர்.

இங்கிலாந்தில் முதன்முதலாக அச்சு யந்திரத்தை ஸ்தாபித்த வில்லியம்—காக்ஸ்டன் என்பவர் (1412—1492), கி. பி. 1474-ல் 'செஸ் ஆட்டம்' என்ற புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டார்.

இந்த ஆட்டத்தைக் குறைந்தது ஐந்நூறு வருஷங்களாக வாவது ஜேர்மனியர் ஆடிவருகின்றனராம். ஆபால—விருத்தர் (இளைஞர்முதல் முதியோர் வரை) ஆடவரும் பெண்டிரும் ஆடுவார்களாம்.

## ஆராய்ச்சி

இனி இந்த ஆட்டம் யாரால் கண்டுபிடிக்கப்பட்டது என்னும் விஷயம் ஆராயத்தக்கது. இதன் சரித்திரத்தை வித்துவான்கள் அப்போதைக்கப்போது ஆராய்ந்து தத்தம் தெளிவுகளை வெளியிட்டிருக்கின்றனர். அவற்றின் சாரம் வருமாறு:

கி. பி. பதினேழாம் நூற்றுண்டில் ஒக்ஸ்போர்ட்டில் பண்டிதராக விளங்கிய ஹைட் என்னும் வித்துவான் (Dr. Hyde) "இந்தச் சதுரங்கஆட்டம் இந்தியாவிலேதான் கண்டுபிடிக்கப்பட்டது; இந்துக்களே இந்த ஆட்டத்தை ஆரம்பித்தவர்கள்" என்று கி. பி. 1694-ல் எழுதினுர். ஆனல் அக்காலத்தவர்கள் அவரது கூற்றை ஏற்றுக்கொள்ளவில்லை. அராபியர்கள், அராகானியர்கள் (தென்னமெரிக்காவில் சிலி தேசத்துக்குத் தெற்கேயுள்ள பிராந்தியக்காரர்கள்), பாபிலோனியர்கள், காஸ்டிலியர்கள் (ஸ்பெயின் தேசத்தார்), சீனர், எகிப்தியர், கிரேக்கர், அயர்லாந்துக்காரர், யூதர், பாரசிகர், ரோமகர், ஸித்தியர் (ஐரோப்பாவின் தென் கிழக்கில், கருங்கடல், கஸ்பியன்கடல், ஏஜாப்கடல்களுக்கு அடுத்த பிரதேசவாசிகள்), வேல்ஸ்நாட்டார் ஆகியவர்கள்தான் இந்த ஆட்டத்தை முதன்முதலாக உருவாக்கியவர்கள் எனப் பல அறிஞர்கள் தங்களது அபிப்பிராயங்களை வற்புறுத்தினர். ஆனல் அப்போது உண்மையான வாதப் பிரதிவாதங்களினுல், சீனரோ, பாரசிகரோ அல்லது ஹிந்துக்களோதான் இதைக் கண்டுபிடித்திருக்க வேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

## சீனர்

கி. பி. 18-ம் நூற்றுண்டின் இறுதியில்வாழ்ந்திருந்த ஐல்ஸ் இர்வின் (Eyles Irvin) என்பவர் "சொங்-கி" அல்லது "அரசாது விளையாட்டு" என்னும் இந்த ஆட்டத்தைச் சீனர்தான் கி. மு. 174-ல் உண்டாக்கினர் என வாதித்தார். சீனுதேசத்து மந்திரியான ஹன்ஸிங் என்பவர் தனது சைனிகர்கள், ஷென்ஸியென்னும் பிரதேசத்தில் யுத்தஞ்செய்து வந்தபொழுது அவர்களது சிரம பரிகாரநிமித்தம் இந்த ஆட்டத்தை நிருபித்தார் என அவர் கருதினுர்.

## பாரசீகர்

பாரசீகர்தான் இந்த ஆட்டத்தை முதன்முதலாக ஆரம்பித்தனர் என்றும், அதன்பின் அது இந்தியாவுக்குச்சென்று விருத்தியடைந்தது என்றும் பிளாண்ட் (Bland) என்னும் ஒரு வித்துவான் வாதித்தார்.

## ஹிந்துக்கள்

ரோயல் ஏஷியாடிக்ஸொஸைட்டியின் (The Royal Asiatic Society) ஸ்தாபகரும், அதன் முதலாவது அக்கிராசனரும் ஆன சேர் வில்லியம் ஜோன்ஸ் என்பவர் மேற்கூறிய ஹைட் பண்டிதரின் அபிப்பிராயத்தை ஆதரித்து "இந்துக்கள்தான் இந்த ஆட்டத்தை ஆரம்பித்தவர்கள்; இந்த ஆட்டம் இந்தியாவில்தான் பிறந்தது; நினைவுக்கெட்டாத புராதனகாலம் முதல் இந்த ஆட்டமானது ரத, கஜ, துரக, பதாதி யென்னும் நான்கு பிரிவுகள் கொண்ட சதுரங்க சேனையின் பெயராலேயே இந்தியாவில் வழங்கிவந்தது என்றும் இக்கூற்றுகளுக்கு ஆதாரமாக இந்துக்களது பதினெட்டுப் புராணங்களில் ஒன்றுன பவிஷ்யத் புராண வசனங்களையும் எடுத்துக் காட்டினுர். இவரது அபிப்பிராயமானது 1783-ம் வருஷத்திய "ஆசிய ஆராய்ச்சிகள்" (Asiatic Researches) என்னும் பத்திரிகையில் வெளியாயின.

## இராவணன் ஆதாரம்

பாரசீகர் இந்த ஆட்டத்தை "சத்ரங்" என்றும், அராபியர் "ஷட்ரங்" என்றும் வழங்கி வந்தனர். இப்பெயர் பலவிதமாக மாறி, இப்போது ஆங்கிலத்தில் "செஸ்" என மருவி வழங்கி வருகின்றது. இதனுல், இந்தியாவிலிருந்துதான் இந்த ஆட்டம் பாரசிகத்துக்கும் அங்கிருந்து அராபியர்கள் மூலம் ஐரோப்பாவின் பல தேசங்களுக்கும் கொண்டு செல்லப்பட்டது என்பது தெளிவாகின்றது.

இந்த ஆட்டம் இலங்கையரசனை இராவணன் ஸ்ரீ ராமருடன் பொருதுவந்த பொழுது அவனுக்கு இடையிடையே நேரிட்ட களைப்பை ஆற்றிக்கொள்ளும் பொருட்டு அவனது மனைவியான மண்டோதரி தேவியினுல் ஆரம்பிக்கப்பட்டது என்று இந்துக்களிடையே ஒருகதை வழங்கி வருகின்றது.

ஹைட் பண்டிதருக்குப்பின், டன்கன் போர்ப்ஸ் (Duncan Forbes) என்னும் பண்டிதர் முன்னையவரின் அபிப்பிராயத்தையும், ஜோன்ஸின் அபிப்பிராயத்தையும் ஆதரித்து இந்த ஆட்டம் இந்தியர்களால் கி. மு. 3000-ல் ஆரம்பிக்கப்பட்டது என்று தமது சதுரங்கத்தின் சரிதையில் எழுதியுள்ளார்.

சென்ற நூற்றுண்டின் பிற்கூற்றில் வாழ்ந்துவந்த டச்சுக்காரரான வான்–டர்–லிண்ட் (Van-der-Linde) என்பவரும், இந்த ஆட்டம் இந்தியரால்தான் உண்டாக்கப்பட்டது; ஆனல் இதை உண்டாக்கியவர்கள் ஹிந்துக்களல்ல, பவுத்தர்கள்தான் என ஒரு கிரந்தத்தில் விஸ்தாரமாக எழுதினுர். "கொலைமறுத்தல்" தங்களது மதக் கொள்கைகளில் ஒன்றுதலாலும், சதுரங்க ஆட்டத்தில் ஜீவஹிம்ஸை ஏற்படாததலாலும் புத்த சமயிகள் தங்களது பொழுது போவதற்காக இந்த ஆட்டத்தை நிருபித்தனர் என அவர் முடிவுகட்டினுர்.

## இந்தியாவின் நன்றி

இந்த வியாசத்தின் முதலில் குறிப்பிட்ட எஸ்கிமோக்கள் வசிக்கும் வடதுருவத்துக்குச் சமீபமாயுள்ள ஸ்வீடன் தேசத்திலும், லாப்லாண்டிலும் (Lapland) புத்தசமயிகள் இன்னும் வசித்துவருகி

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

கலாயோகி

## ஆனந்த குமாரசுவாமி

முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி

நீராழி புடைசூழும் நெடியதிரு வளத்திலங்கை
நிலத்தே மிக்க
பேராள விளங்கவைத்த பெரும்புகழி னருங்குடியிற்
பிறந்து நின்ற
சீராளன்; கலைக்குரிசில்; ஆங்கிலமுஞ் சிங்களமுந்
திருத்தா யான
நாராளு மொழியழகின் செழுந்தமிழும் ஆரியமும்
நயந்து கற்றோன்; 1

மாட்சியினுல் எழிலுடலின் வளர்ச்சியினுற் பாந்தமுக
மலர்ச்சி தன்னுல்
காட்சியினுல் ஆங்கிலரும் ஏக்கறநா நலம்படைத்துக்
கதித்த பாங்கால்
ஆட்சியினுல் இலங்கைமக்கட் காவனநன் கமையவைத்த
அமைவாற் செல்வ
நீட்சியினுல் ஞாயிறென வெம்மருங்கும் ஒளிநிறைந்த
நெறியின் செம்மல்; 2

இந்தியநாட் டெழிற்பனுவற் சிறெல்லாம் மேனுட்டார்
இயைந்து நோக்கிச்
சிந்தையிடை மதிப்புவைப்ப விளக்கமெண வறிவுறுத்த
செழிய ஞவான்
இந்துமதத் தியலினெடு பவுத்தமதத் தினிமையெலா
மினிது மாந்தி
அந்தமிலின் பொடுநூல்க ளாங்கிலத்தி னுக்கிவெளி
யாக்கி வைத்தோன். 3

திகழ்ச்சிமலி யாயிரத்தெண் ணூற்றறுபான் மூவாண்டிற்
சிறப்பி னேடு
புகழ்ச்சிவர வாய்மையொன்றே புகலெனக்கொண் டறியாதார்
புரிந்து நின்ற
இகழ்ச்சியெலாம் பொறுத்துயர்ந்த தூயவரிச் சந்திரன்சி
ரெழுதி லண்டன்
மகிழ்ச்சியொடு வீற்றிருந்த பேரரசி முன்னடித்து
வரிசை பெற்றோன். 4

ஆசியா வெனுந்தேயத் தையனுர் (Sir) எனுமுயர்ந்த
அணியார் பட்டம்
தேசினுல் முதன்முதலாப் பெறும்பேறும் பரிஸ்டரெனும்
சிறந்த பட்டம்
பேசினுல் யூதரொடு கிறிஸ்தவரே பெறுகபிறர்
பெறும்பே றில்லா
மாசினு ரென்றுகொண்ட வழுவொழித்திங் கப்பதமும்
வாய்க்கப் பெற்ருேன். 5

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விலங்குகள் ஒற்றுமையாகப் படையெடுத்துவரின் மனிதர்கள் எந்த மூலைக்கு........"

# வன சஞ்சாரம்

நான் ஒருவன்தானா? உலகத்தில் எந்த வாலிபனுக்கு, எந்தப் பெண்ணுக்குத்தான் விவாகஞ் செய்துகொள்ளவேண்டுமென்று ஆசையில்லை. ஆனால், பெற்றோர்கள் விவாகம் பேசிக்கொண்டு சென்றால், பிள்ளைகள் விவாகம் செய்ய விருப்பமில்லாதவர்கள்போல் 'இப்பொழுது வேண்டாம்; ஆ; ஊ;' என்று இழுத்துச் சாக்குப் போக்குச் சொல்லி, இறுதியில் விவாகம் செய்வார்கள். ஆனால் நான் அந்த அளவுஞ் செய்யாது, 'எனக்கு விவாகஞ் செய்ய நல்ல விருப்பம்' என்று வெளிச்சமாக சொல்லியும், எனக்கு இன்னும் விவாகம் நடக்கவில்லை. இது என் மனக்குறை. இந்தக்குறை எப்பொழுது தீருமோ? அந்த நாளை நினைத்து என் மனம் ஏங்கித் தவங்கிடக்கிறது. 'தேடிப் போனால் கிடையாது' என்பது ஒருவேளை உண்மைதானா? அல்லது செவ்வாய்க் குற்றம் என்று சொல்லப்படுகிற அந்தப் பொல்லாத குற்றம் என் விஷயத்தில் தலைப்படுகிறதோ? அந்தநாளும் வந்திடாதோ?......

இவ்வளவும் நான் தினமும் சிந்திக்கும் விஷயம் இதை முதலில் வெட்கமில்லாமல் சொல்லியிருக்கிறேன். ஏனெனில் பின்னால் சொல்லப் போகிற சம்பவங்களுக்குள் உங்கள் மனம் லயிக்காமல், எனது அடிப்படை என்ன என்பதை நீங்களும் மறவாமல் இருப்பதற்காகத்தான்.

## 2. மெய்க்கஞ்சி வித்தியாசாலை

மெய்க்கஞ்சி வித்தியாசாலை, முன்பு கவர்னராயிருந்த யாரோ ஒரு வெள்ளைக்காரன் யாழ்ப்பாணப் பட்டினத்தில் கட்டப்பட்ட வித்தியாசாலை. யோசித்துச் செய்கிற காரியங்களிலும், யோசியாமற் செய்கிற காரியங்கள் சித்திப்பதுகூட, யோசியாமல் வைத்த பெயர் எவ்வளவு பொருத்தமாய் அமைந்திருக்கிறது பாருங்கள். இந்த வித்தியாசாலையில் அடியேனைத் தவிரப் 'பிறின்ஸிப்பல்' ஆசிரியர், மாணவர்கள் எல்லோரும் மெய்பேச அஞ்சுவார்கள். மெய்க்கஞ்சி வித்தியாசாலை அல்லவா? எவ்வளவு பொருத்தம்!

'பிறின்ஸிப்பல்' "இன்று 'இன்ஸ்பெக்டர்' வருவார், உற்சாகமாகப் படிப்பிக்க வேண்டும்" என்று சொன்னால், நிச்சயம் அன்று 'இன்ஸ்பெக்டர்' வரமாட்டார். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் என்னைத் தனித்தனி கண்டு "இன்று 'மீற்றிங்'கில் 'பிரின்ஸிப்ப'லில் உள்ள குறையெல்லாவற்றையும் நேரே எடுத்துச் சொல்லப்போகிறேன்" என்று சொல்வார்கள். ஒருவரும் ஒன்றும் பேசமாட்டார்கள். நான்தான் அகப்படுவேன். மாணவர்கள், "இன்று கோயிலுக்குப் போனேம் சேர்; இன்றைக்கு நாலு கணக்குத் தாருங்கள். நாளைக்கு முழுதும் செய்து வருகிறோம்" என்பார்கள். ஒரு கணக்கும் செய்து வரார்கள். அவர்களில் என்ன குறை.

வித்தியாசாலை மெய்க்கஞ்சி வித்தியாசாலை.

இச்சந்தர்ப்பத்தில் வித்தியாபகுதியாரிடமிருந்து, 'மூன்றுமாத காலத்திற்கு, வவுனியாப் பகுதியிலுள்ள அரசினர் பாடசாலைக்குப் பதிற்றலைமை ஆசிரியராகக் கடைமையாற்ற வேண்டும்,' என்று உத்தரவு வந்தது. 'பிரின்ஸிப்பலு'க்குப் பெரிய மகிழ்ச்சி. 'காட்டுக்காய்ச்சல் வாங்கிக் களை தெளிந்து

– – கசின் – –

வருவார் தம்பி;" என்று சொல்லிக்கொண்டார். மூன்று மாதத்திற்குள் விவாகம் நடக்கும் என்று சொன்ன குருவிச் சாத்திரகாரனைத் தேடிப் பிடிக்கவேண்டுமென்று எனக்கு ஆத்திரமாயிருந்தது,

## 3. காதலியார் சம்மளங்குளம்

நான் சென்ற பாடசாலையின் ஊருக்கு 'காதலியார் சம்மளங்குளம்' என்று பெயர். இந்தமாதிரியான பெயரும் இல்லாவிட்டால் எனக்கு அங்குச் செல்லச் சிறிதும் விருப்பம் இருந்திராது. 'காதலியார்' என்ற சொல் என்னை அங்குச் செல்லத் தூண்டியிருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்.

காதலியார் சம்மளங்குளம் மாங்குளம் வரையும் புகையிரதத்தில் சென்று பின் பத்து மைல் பஸ்ஸில் சென்று, பின் பத்துமைல் நடுக்காட்டின் ஊடே வண்டியாற் செல்ல வேண்டும்.

குளமும், வயல் வெளியும். ஐந்து ஆறு குடிசைகளுமுள்ள ஒரு சிறு கிராமம். சுற்றிவர யானை, புலி, கரடி வசிக்கும் காடு. வனவிலங்குகளின் இராச்சியத்தில், ஒரு சிறு பகுதியில் மனிதன் தந்திரமாக வாழ்க்கை நடத்துகிறான். வனவிலங்குகள் மாத்திரம் தங்களுக்குள் ஒற்றுமையாகப் படையெடுத்துவரின் மனிதர்கள் எந்த மூலைக்கு

'மனிதர்களே, நீங்கள் எங்களிலும் பார்க்க அதிகம் திருந்திய சாதிகள் அல்லர்,' என்பதை அங்குள்ள குரங்குகள் எனக்கு அடிக்கடி ஞாபகமூட்டி வந்தன. சந்தையிலே குரங்கை ஆட்டிப் பிழைக்கும் குறவனுக்கும், என்னை இந்தக் காட்டிலே ஆட்டும் வித்தியா பகுதிக்கும் யோசித்துப் பார்க்கும்பொழுது அதிகம் வித்தியாசமில்லை.

எனக்கு அங்கே போன நாட்டொடக்கம் நெஞ்சுப் படபடப்பு ஒருநாளும் குறைவதில்லை. கரடி, புலி, யானை, என்ற எண்ணம் என்னைவிட்டு அகலவுமில்லை. நித்திரையிலும் கரடியையோ புலியையோ, யானையையோ கண்டு அலறுவேன்.

அவ்வூரவர்கள் புது உபாத்தியார் என்று என்னை உபசரித்து, "நீங்கள் மிருகங்களுக்குச் சற்றும் பயப்படவேண்டாம், அவைகள் மனிதரை ஒன்றும் செய்யமாட்டா" என்று ஆறுதல் கூறி, எனக்கு வேண்டுவன புரிந்தார்கள். வேறு என்னதான் அவர்களாற் செய்யமுடியும்.

## 4. ஜெமயில் பாடக்கேட்டேன்

காதலியார் சம்மளங்குளம் மிகவும் பெரியகுளம்; அகலமான கட்டு; பார்க்க மிகவும் அழகாக இருக்கும். மறுநாள் மாலை குளக்கட்டு வழியே உலாவிக்கொண்டு சென்றேன். நீரை அளாவிக்கொண்டு வரும் குளிர்ந்த காற்று மிகவும் சுகமாக இருந்தது. ஒரு பக்கம் பச்சைப் பசேலென்ற வயல் வெளியும், மறுபக்கம் இருண்ட நீர்நிலையும், மனதுக்கு ஒரு அமைதியைக் கொடுத்தது.

கொக்குகளுக்கும் மனிதர்களுக்கும் ஏதும் கோபம் உண்டோ தெரியவில்லை. கொக்குகளுக்கு எருமைக்கடா வாகனம் என்பதைக் குளக்கரைகளில் கண்ணுற் கண்டும், 'இயமனுக்கு எருமைக்கடா வாகனம்' என்று சொல்லுகிறார்களே.

இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டு செல்கையில் சில மயில்கள் தோகை விரித்து ஆடக்கண்டேன். என் சீவியத்தில் முதன்முதற் கண்ட அபூர்வக் காட்சி. கடவுள் மனிதன் கவலையின்றிச் சீவிக்க வேண்டுமென்று எத்தனையோ இயற்கைக் காட்சிகளைப் படைத்தார். தனது முழுச் சக்தியையும் கூட்டித் தோகைமயிலைப் படைத்தார். தோ

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

# வேண்டாத ஆராய்வு

### இலக்கிய அரங்கம்

(9-1-49-ன் தொடர்ச்சி)

மணிமேகலை, சிலப்பதிகாரம் என்னுந் தனித் தமிழ்க் காப்பியங்களில் மனிதர் தெய்வத்தன்மை பெறும் வரலாறுகள் கூறப்படுகின்றன. மனிதரைத் தெய்வமாகப் போற்றுதல் வள்ளுவர்க்கே உடன்பாடு

'வையத்துள் வாழ்வாங்கு
வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்'

என்பது வள்ளுவர் வாக்கு. இது தமிழ் மரபன்றென எவரும் கூற முடியாது. ஆனால் காப்பியத்தலைவனை எந்தவிடத்தும் தெய்வமாக மட்டுங் கண்டு போற்றும் பண்பு வடநாட்டாரது. இதைத் தமிழ் மொழியிற் புகுத்தியோர் இராமாயணம் கந்தபுராணம் முதலிய வடநூற்கதைகளை மொழிபெயர்த்த தமிழ் நூலாசிரியர்களே யாவரென்பது எங்கொள்கை. இதனால் மானிடரைத் தெய்வமாக்கல் ஆரியமரபு மாத்திரமன்று- தமிழ் மரபுமேயென்று நிலைநிறுத்தற்கு நண்பர் செய்த ஆராய்ச்சி தேவையற்றதும் பொருத்தமற்றதுமாமென்பது வெளிப்படை.

சிலப்பதிகார நூலாசிரியர் கண்ணகி மதுரைக்கு வந்ததன் மேல் அவளைத் தெய்வமாகக் காண்கிறார். கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் இலங்கைக் கஜபாகு முதலியோர் அவளைத் தெய்வமாகக் கொள்கின்றனர். ஏன்? இன்றுங் கண்ணகி தெய்வமாக நின்று நிலவுகின்றாள். கண்ணகியைப் புகாரில் மனிதப் பெண்ணாகமட்டுங் கண்ட இளங்கோ மதுரையிலும் வஞ்சியிலுந் தெய்வமாகப் போற்ற அவரோடு சேர்ந்து போற்றியதோடமையாது அவள் தெய்வத் தன்மையை வியந்துங் கூறிய வித்துவான், இளங்கோ காட்டிய தமிழ் மரபை அதாவது மனிதர் தெய்வமாகப் போற்றப்படுதலை ஆரிய மரபென்பாரா? அவர் அப்படிச் சொன்னாரென நண்பர் கூறினும் கேட்பார் நயபுவாரா? காக்கியைத் தெய்வமாகக் கொண்டு வித்துவான் பாடுகிறாராம். அவரைத் தெய்வமாகப் போற்றுவதற்குந் தெய்வங்களை ஆகாயத்திலிருந்தும் இறக்கிக்கொண்டுவந்து காப்பியத் தலைவராக்கும் வடநூல் மரபுக்கும் இயைபுண்டா? இவையிரண்டும் ஒன்றா? கம்பன் இராமனை மனிதனாகவும் கச்சியப்ப சிவாசாரியார் முருகனை மனிதனாகவும் நோக்கியது யாண்டுமில்லை. இராமன் மனிதச் சட்டை சாத்திய தெய்வம். முருகன் மனிதச் சட்டையேயில்லாத தெய்வம், சாட்சாத் தெய்வந்தான். காப்பியத் தொடக்கத்திலேயே இராமனைத் தெய்வமென்று வாழ்த்தினார் கம்பர். கச்சியப்பர் முருகனைப் பணிந்தார்.

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

ஆசிரியருக்குக் கடிதம்

# பொறுமையின் பேறு

'விபரீத விவாதம்,' 'தமிழ் வழக்கும் ஆரிய வழக்கும்', 'இலக்கிய வரையலற' என்னும் தலையங்கங்களில் என்னால் ஈழகேசரியில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் பற்றி பண்டிதர் க. நாகலிங்கம் அவர்கள் சென்ற பல ஈழகேசரி இதழ்களில் எழுதியுள்ளார். அதுசம்பந்தமாக அவற்றை மறுத்து எழுதவேண்டிய அவசியமில்லை என்பது என் எண்ணம். ஏனெனில் அவர் பொறுமை வயப்பட்டுக் கட்டுரை எழுதியிருப்பதாக ஆரம்பத்திற் கூறியுள்ளார். அவர் "அதைப் படித்த எம்போலியருக்கு எக்காரணம் பற்றியோ மனம்பொறுக்க முடியவில்லை. இக்காரணத்தால் நண்பர் ஆராய்ந்து முடிவுகண்ட விஷயங்களை ஊன்றி நோக்க நேரிட்டது." எனக்கூறியுள்ளாராகையால் அவருக்கு விளக்கம் தரவேண்டி விரித்தெழுதுவது பயன் தராதாகையாலும், விஷய விவாதங்களை ஆராய்ந்த நண்பர்கள் உண்மை உணர்ந்திருப்பாராகையாலும் அங்ஙனம் செய்வதை விட்டு இக்கடிதத்தை எழுத முற்பட்டேன்.

(1) நண்பர் தம்மனம் போனபடி எழுந்தமானமாக கூறுவதன்றி ஆலோசனையுடன் கூறாமை. (உ-ம்) i மருதநிலத்துக்கு ஊடல் உரி என்பது உணராது நீலகண்ட நாயனாரது மனைவியின் செயல் ஊடல்பற்றியது என்பதையும் அது சிற்றின்பம் தருதற்குப் பதில் பேரின்பம் தந்தமையையும் அறியாது பலபடக் கூறியமை.

ii நூல்களில் பாதாதிகேச வர்ணனை கூறல் இயல்பு என்றும் அவ்வாறு வருதல் நூற்றுணிபு என்றும் கூறி "மணந்தாள் புரிகுழலாள் அல்குல்போல் வளர்கின்றதே" என திருக்கோவைஉதாரணம் காட்ட நண்பர் எழுந்தமானமாக அதற்கு நொண்டிச் சமாதானம் கூறினார். இனி, கலித்தொகையில் கவிக் கூற்றாக 'கோடுயர் அகலல்குல்' எனவும், முருகாற்றுப்படையில் "பணிந்தேந்தல்குல்" என ... ... பலவென்?

(2) முன்னொடு பின் முரணிக்கூறும் இயல்புடையர்:

உ-ம்: இராமன் பிரிவு தீவினைபற்றியது என்று இளங்கோவால் கூறப்பட்டது 'ஜைன மதக் கொள்கை பற்றி'யது என்று, ஜைனர் பொருள் முடிபு வழுவானது என்பதை "கம்பர் ஒப்புவாரா?" என்னும் வினாக்கள் மூலம் மறுத்த நண்பர், தமது முதலாவது கட்டுரையில் ஜைனர்கள் பொருள் மரபு உணர்ந்தோரே என்று கூறுகிறார்.

(3) அறிஞர்களின் நிலைபேறான கொள்கைகளைத் தாம் விரும்பியபடி மாற்றிக் கூறுவதன் மூலம் அவர்களை அறிவீனர் ஆக்கியமை, உ-ம்: இராமாயணம், கந்தபுராணம் முதலியன உயரிய காப்பியங்களென்பதும் சம்பந்தர் கழு அறம் என்பதும் வித்துவான் வேந்தனார் அவர்கள் அபிப்பிராயம் எனவும் பண்டித சி. கணபதிப்பிள்ளை அவர்கள் சீதை பக்கம் நின்று சொல்லம்பு விட்டமையால் வேந்தனாரும் கண்ணகி பக்கம் நின்று சொல்லம்புகள் விட்டனர் என்றும் நண்பர் கூறுகிறார். [இது இவருக்கு இங்ஙனம் புலப்பட்டது எங்ஙனமோ அறியோம்] இதனை வேந்தனாரும் ஒப்புக்கொள்ளாரே! பண்டித கணபதிப்பிள்ளை அவர்கள் கண்ணகியை வெறுக்கவில்லை. இளங்கோ கண்ட கண்ணகி பெண்மையினின்றும் வழுவினள் என்பதே அவர்கட்சி. எனவே அவர் கண்ணகிமீது சொல்லம்பு விடவில்லை. இளங்கோ மீதே சொல்லம்பு (நண்பர் வாய்பாடுபற்றி) விட்டார். அங்ஙனம் விட்ட பண்டிதர் இளங்கோவை உயரிய புலவராக மதிக்கவில்லையே! ஆயின் வித்துவான் அவர்கள் கம்பர்-கச்சியப்பர்-மீது சொல்லம்பு விட்டுக்கொண்டே அவர்களை நன்கு மதிக்கிறார் என்றல் எங்ஙனம் பொருந்தும்: அங்ஙனம் கூறின் அவரால் சொல்லம்புவிடப்பட்ட பகுதிகள் வேந்தனாருக்கு விளங்கவில்லை என்றன்றோ கொள்ளவைக்கிறார்.

4. அச்சுப்பிழை, பிழை திருத்தம் முதலியவற்றைக் கூடப் பொருட்படுத்தாது நண்பர் எழுதியமை கொண்டு அவரது பொறுமையின் அளவு தீர்மானிக்கப்படுகிறது.

5. நூல்களை விளக்கும் ஆற்றல் அற்றவர்:

உ-ம்: மக்கள் உருத்தாங்கினோர் எவரும் மக்களாகார் என்பதை நூல்கள் மூலமோ, பட்டம் பெற்றோர் அனைவரும் அப்பட்டத்துக்கு உரித்தல்லர் என்பதை அநுபவமூலமோ அறிந்திருப்பின் பெண் உருத்தாங்கினோர் அனைவரையும் பெண்ணெனக் கூறார். 'சண்டாளி சூர்ப்பனகை தாடகையைப் போல் வடிவு கொண்டாளைப் பெண்ணென்ற' என்பதை அறிந்திருப்பின் கைகேயி, கூனி என்பவர்களைப் பெண்ணென்று கருதி உதாரணம் காட்டுவாரா? இவர்களைப் பெண் என்று கருதும் நண்பர் கண்ணகியையும் பெண் என்றல் வியப்பன்று.

6. புதுப்பொருள் தாமே படைக்கிறார்:

உ-ம்: 'போற்றா ஒழுக்கம்' என்பது கோவலன் வணிக குல ஒழுக்கம் தவறியமையைக் கருதும் என நண்பர் தம்மனம் போனவாறு உரை கூறுகிறார். அவருடைய தோல்விக்கு இங்ஙனம் புதுப்பொருள் கூற முற்பட்டமையே போதும். அது தோல்வியை ஒருவாற்றான் ஒப்புக்கொண்டமையேயாகும்.

7. பிரதான அம்சங்களை மறக்காது விட்டமை.

உ-ம்: கண்ணகியைத் "துர்க்கை, கொற்றவை, பத்திரகாளி" என வாயிற்காவலரும், "நாணமிழுசல் செய்யத் தணித்தாள்" என அடியார்க்கு நல்லாரும் கூறியதாக என்னாற் காட்டப்பட்டனபற்றி யாதொன்றும் கூறாதுவிட்டார். [இன்னும் அவர் கட்டுரைகள் முடிபுபெறவில்லையாதலின் இனிமேலாவது சமாதானங் கூறட்டும்.]

இதுவரையும் கூறிய காரணங்களினாலும் பண்டிதர் நவரத்தினம் அவர்களால் எழுதப்பட்ட 'விளங்கா விளக்கம்' என்னும் கட்டுரை காரணத்தாலும் இக்கடிதமே போதிய தென்பது என் எண்ணம்.

இங்ஙனம்;
வ. நடராஜா

குரும்பசிட்டி,
19.1.49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாத்தியக் கோளாறு

நவீன ஆராய்ச்சி

> சுவாத்திய மாறுதலினுல் ஏற்படும் அற்புதங்களை ஜாக்கஸ் இக்கட்டுரையில் ஆராய்ந்துள்ளார். இதற்காக ஆகாய விசாரணை ஒன்று அவசியமென்பதை டைம்ஸ் பத்திரிகையில் வற்புறுத்தியுமுள்ளார்.
> —ப-ர்.

அத்தியாயம் 21

ஸ்ரீ லங்காவின் சுவாத்தியம் என்றுமே வழக்கத்துக்கு மாருனது. நாங்கள் எட்டுத்திக்கிலேனும், பதினறு கோணத்திலேனும் இருந்தாலென்ன ஸ்ரீ லங்காவின் சுவாத்தியம் சுகம் பேசுவதில்லை. ஏதோ கோளாறு செய்து கொண்டே வருகின்றது.

மழை பொழிந்தால் அதற்கு ஓய்வு ஒழிச்சலே கிடையாது. ஒரே வெள்ளந்தான். அகாலமழையாக அது வழக்கத்துக்கு மாருகவே நடந்து கொள்ளும். காற்றடித்தாலும் அதில் ஏதோ நூதனம் இருந்தே தீரும். அதிக நாட்களாக மழையின்றி வரட்சியேற்படுமாயின் அதுவும் எதிர்பாராத ஒரு காரியமாகவே இருக்கும். இது எமக்கு வியப்பை யூட்டுவதுடன் நில்லாது, எமது உள்ளங்களையும் உறுத்தி விடுகின்றது. குளிர் வந்தாலும் அது எலும்புகளைக்கூட விறைக்கச் செய்து விடும். அத்துடன் ஒன்றுக்கு மூன்று கம்பிளிகளை எடுத்துப் போர்த்து மூடிக்கொள்ள வேண்டியிருக்கும்.

ஆகவே, என்னதான் நடைபெற்றாலும் ஸ்ரீ லங்காவின் சுவாத்தியமானது எப்போதுமே வித்தியாசமென்பது இதிலிருந்து நன்கு விளங்கும்.

## சுவாத்திய முகவுரை

இந்த நூதன சம்பவங்கள் காரணமாக இலங்கையின் சீதோஷ்ண நிலைமையைப் பற்றியே பலரும் சம்பாஷிப்பது இன்று வழக்கமாகிக்கொண்டது. இதுவிஷயத்தில் நாங்களும் வெள்ளைக்காரர்களைப் போலவே வித்தியாசமாக நடந்துவருகின்ருேம். வெள்ளைக்காரர்கள் சம்பாஷணையை ஆரம்பிப்பதற்காகச் சுவாத்தியத்தைச் சாட்டாகக் கொண்டு பிள்ளையார் சுழி போடுவார்கள். ஆனல் இது அதிமுக்கியமான விஷயங்களின் ஒரு சிறு முகவுரையாகவே அமைவது வழக்கம். எதற்கும் இலகுவில் அசையாத பேர்வழியான வெள்ளைக்காரர்களின் உள்ளம் அசைந்துகொடுத்துச் சீதோஷ்ண நிலைமையில் அது படிந்துகொள்வதைக் காணும் அவரது நண்பர், "ஆசாமி விஷயம் அறிந்தவர்" தான் என்று உணர்ந்து விடுகின்ருர். உடனே அன்னியோன்னியமான முறையிலே தாராளமாகப் பேசுகின்ருர். சுவாத்தியத்தைப்பற்றிய அவரது அபிப்பிராயம் அசைக்க முடியாததொன்ருயின், ஐக்கியநாடுகள் சங்கம்பற்றித் தாம் கொண்ட அபிப்பிராயத்தை அவர் கிரகித்துக்கொள்ளும் சக்தி படைத்தவர் என்ற முடிவுக்கு அந்த நண்பர் வந்து விடுகின்ருர். பிரித்தானியரின் மனப்பாங்கின்படி சுவாத்தியம்பற்றிய பேச்சு எவ்வித மகத்துவமும் வாய்ந்ததன்று. சம்பாஷணைக்கு முதற்படியாகவே அதை அவர்கள் கையாண்டுவருகின்றனர். வரவேற்புச்சபையின் தலைவர் எழுந்து பேசுகின்ருரே, அது போன்றது தான்.

## உயர்வானபேச்சு

இலங்கை வாசிகளாகியநாங்கள் முகவுரையாகச் சுவாத்தியத்துடன் சம்பாஷணையை ஆரம்பிப்பதில்லை. தலைமைப் பேருரையை நிகழ்த்தும் ஒருவரின் ஆவேசக்கனலுடனேயே நாங்கள் சுவாத்தியத்தைப்பற்றி வெளுத்து வாங்குகின்ருேம். சேர் ஒலிவர் குணதிலகா அவர்களைப் பற்றியசெய்தி எவ்வளவு முக்கியம் வாய்ந்ததோ, அதேயளவுக்குத்தான் நாங்கள் சுவாத்தியத்தையும் கணித்து விடுகின்ருேம். ...நாங்கள் இதைச் சகல கோணங்களிலிருந்தும் ஆராய்வதுடன் அமையாது, வெப்பம் அதிகமாக இருந்தால் "ஆம், அது காலத்துக்கு ஏற்ற வெய்யில்தான். ஆனல், நெருப்பாக இருக்கின்றதே" என்று சொல்லிக் கொள்ளுகின்ருேம். இல்லாதுபோனல் "இந்த நாட்களில் மழை ஒருபோதும் பெய்வதில்லை. ஏனே இம்முறை இப்படி" என்று புதுமையாகப் பேசுகின்ருேம். சரி, மழை பெய்யாதொழியின "ஏன் பெய்யவில்லை" என்ற ஆராய்ச்சியில் இறங்கிவிடுகின்ருேம். இதற்கு எவராலும் பதில் கூறவே முடியாது. உடனே என்னமுடிபுக்கு வருகின்ருேம் தெரியுமா? "தேவையில்லாதபோது மழை பெய்யுமென்பது எங்களுக்குத் தெரிந்த விஷயந்தானே" என்று உயர்வாகப் பேசுவதுஎங்கள் வழக்கமாகிக்கொண்டது.

## சுபமுகூர்த்தம்

மணமகள் மகிழ்ந்தாற் பகலவன் திகழ்வான், என்பது பிரிட்டனில் நிலவிவரும் ஒரு பழமொழியாகும். வெய்யோனின் கருணைமிகுந்த ஸ்ரீ லங்காவில் இத்தகைய ஒரு சொற்ருெடர் இல்லாதிருப்பதின் காரணம் யாதோ? சுவாத்திய மாருட்டமே இதற்குக் காரணமாகும். விவாக காலங்களில் மப்புமந்தாரமின்றி ஆகாயம் தெளிவாக இருக்க வேண்டுமென மக்கள் அனைவரும் விரும்புகின்றனர். திருமணத் தம்பதிகளின் உள்ளங்கள் பொங்கி வழிய வேண்டுமென்பதற்காக நாங்கள் சோதிடர்களின் உதவியை நாடுகின்ருேம். சீதோஷ்ண நிலைமை சீர்குலைந்து விடக்கூடாதென்பதற்காகவே நாங்கள் திருமணங்களைச் சுபமுகூர்த்தத்தில் நடாத்துகின்ருேம். ஆனல் அச்சுபதினத்திலேதான் வானமும் பொழிந்து கொட்டிவிடுகின்றது. காரணம்? சுவாத்தியக் கோளாறு எனச் சுருக்கமாகச் சொல்லிவிடலாம். பிரிட்டனிற் சதா மழை பெய்து கொண்டிருப்பதால் ஒரு நாளும் இல்லாத திருநாளாக விவாகதினத்திற் சூரியன் குஞ்சு முகிற் கூட்டங்களுக்கிடையே ஜகஜோதியாகப் பிரகாசிக்கும்போது அங்குள்ளவர்கள் துள்ளிக்குதிக்கின்றனர் ஸ்ரீ லங்காவிற் சூரிய வெளிச்சத்துக்குக் குறைவில்லை. அப்படியிருந்தும் நல்லநாள் பெருநாள் பார்த்து விவாக முகூர்த்தத்தை நிச்சயித்தாலும் மழை பெய்யாமற் போவதில்லை.

## அந்தக்காலத்தில்

இந்த நிலைமை ஸ்ரீ லங்காவில் என்றுமே இருந்து வந்ததா? "இல்லை" என்று அறுதியிட்டுக் கூறுகின்ருர் பழைய காலத்துப் பேர்வழி ஒருவர். அந்தக்காலத்தில் இப்படியான சுவாத்தியக் கோளாறு இருந்ததேயில்லை என்று கூறி அவர் கையை விரிக்கின்ருர். அந்தக் காலத்திலே வாழ்க்கை குதூகலமாகவிருந்ததெனவும் மாதமும்மாரி பெய்ததெனவும் அவர் பெருமையாகப் பேசுகின்ருர். பருவப் பெயர்ச்சிக் காற்றுக்கூடச் சொல்லி வைத்ததுபோலக் குறித்த காலத்திலேயே விஜயம் செய்ததாம். வேண்டிய காலத்துக்கு மழை பெய்யும். பின்னர் நின்றுவிடும். அந்தக்காலத்தில் வெள்ளம் என்பது கிடையாதாம். புல் பூண்டு, மாஞ் செடி தண்ணீரின்றிக் காய்ந்ததுமில்லையாம். இவ்வாறு யாவும் திட்டப்படி நடந்து வந்ததாகப் பழையகாலத்துப் பெரியார் பறை சாற்றுகின்ருர்.

அந்தக்காலத்து ஸ்ரீலங்காவில் அதன்கலாசாரமும்சுவாத்தியக் கோட்பாட்டுக்கு இணங்கவே பரிணமித்தது. பழைய காலத்து ஏடுகளைப் புரட்டிப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும். வெள்ள நிவாரணத்துக்கோ அல்லது வேறெந்தப் பயிரழிவுக்கோ அந்தக் காலத்து மந்திரிமார் பிரேரணைகள் சமர்ப்பிக்கவுமில்லை; வாக்குகள் பெறுவதற்குத் தவண்டையடிக்கவுமில்லை. இவற்றிலிருந்து நாம் அறிவதென்ன? இந்த நாட்டிற் சகல விஷயங்களும் சம்பூரணமாக நடைபெற்றுவருகின்றன. ஆனல் இந்த சீதோஷ்ண நிலைமைதான் குறுக்கே நிற்கின்றது.

## மகாயுத்தம்

இச்சுவாத்தியக் கோளாறுக்குப் பலரும் பலவிதமான காரணங்களைக் கூறுகின்றனர். மூன்ருவது மகாயுத்தம் நடைபெறும்போது ஜனநாயகம் பவுத்திரமாக இருக்கவேண்டுமென்பதறகாகவே உலக மகாயுத்தங்கள் இரண்டும் நடைபெற்றன. இதற்குமுன்னர் வெயிலுக்கும் மழைக்கும் மரக்கூட்டங்களே காரணமெனக் கூறிப் பலருங் கண்டித்தனர். யுத்தத்தின் பேருக முகிற் கூட்டங்கள் கலைக்கப்பட்டதினலேயே சுவாத்திய மாருட்டமும் உண்டாயிற்றெனக் கூறுவாருமுளர். தகுந்த காரணமில்லாதபடியால் நாங்கள் இடைநடுவில் நின்று தத்தளிக்கவேண்டியிருக்கின்றது.

## பெரிய குற்றம்

இன்றைய அரசாங்கம் இதைப்பற்றி அக்கறையின்றி இருக்கின்றதென்பது பாரதூரமான ஒரு குற்றமாகும். நாங்கள் சுதந்திரக் காற்றை அனுபவிக்கின்ருேம். ஆனல் சுவாத்தியத்துக்கு இன்னும் அடிமையாகத்தானே இருந்து வருகின்ருேம். பணமுடைகளுக்குக் குடைக்குப் பஞ்சமிராது. போதாக்குறைக்கு அவர்களுக்கு தூவானமடியாத மோட்டோர் வண்டிகளுண்டு. அத்துடன் மழைகாலத்திற் போடுவதற்கான நெட்டங்கிளையும் மாட்டிக்கொள்ளுவார்கள். தொழிலாளர்களும் வருந்த உழைப்பவர்களுந்தான் சுவாத்தியத்துக்கு இலக்காகி

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)



LTS. 198-86 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னுகம், சர்வதாரி, தை கoஉ
— காந்தி ஆண்டு 80 —


## கல்வித் திட்டம்

இலங்கையின் முன்னேற்றத்துக்கும் மேனிலைக்கும் இன்றியமையாத சாதனமாக விளங்குவது தேசிய முறையிற் கல்வி விருத்தியடைவதே. இதை நமது அரசினர் அறியாதிருக்கவில்லை. வகுக்கப்படும் திட்டங்கள் யாவும் இதனை இலக்காகக் கொண்டிருப்பது அவசியமன்றே பழைய முறைகளின் அளவுகடந்த ஆர்வமுடையார் சிலர், புதிய திருத்தங்களையும் மாற்றங்களையுங் கண்டு வெருட்சியடைகின்றனர். நம் நாட்டின் கல்வி நிலை பாழடையப் போகின்றதென்கின்றனர். இவர்களின் போலி நடிப்பினைக் கண்டு அரசினர் சிறிதும் தயங்கவேண்டியதில்லை. தாம் மேற்கொண்ட வழியில் உறுதியாகச் செல்லவேண்டியதுதான். தேச பாஷை விஷயமாக அதிகம் அக்கறை கொண்டு வித்தியா பகுதியினர் உழைப்பதும் சிலர்க்குப் பிடிக்கவில்லை.

ஆங்கிலப்பாஷை விரைவில் மறைந்துபோகுமோவென்று அஞ்சிப்போலும், சில மேல்நாட்டு மோகிகள் ''மாற்றம் மெல்லமெல்ல ஆகவேண்டும்'' என்று வேகத்தைத் தணிக்கின்றனர். சிறிது காலத்துக்கு—அதாவது மாற்றம் ஏற்படுங்கால்—சிற்சில குறை குற்றங்கள் ஏற்படாதுபோவது எப்படி? நட்டங்கள் வந்தாற்றனும் காரியமில்லையே. ஏற்படவிருக்கும் பெரு நன்மைகளை நோக்குமிடத்து இச்சிறிய குறைகள் இருந்தென்ன செய்யுமோ? அதைவிட்டுத் திருத்தங்களையும் மாற்றங்களையும் தடை செய்வோர் தேச விரோதிகளாவர். சென்ற பல நூறு வருடங்களாக நம் நாடு அடிமை நிலையிலிருந்து பாழடைந்ததைப் பார்த்துப் பொறுத்திருந்தவர்கள், மூன்று நான்கு வருடங்கட்குப் பொறுத்திருந்தால் என்ன வந்துவிடுமோ? ''மெல்ல'', ''மெல்ல'' என்று சொல்வதெல்லாம், வேண்டாம்! வேண்டாம்!! என்ற கருத்துப் படாதா? உண்மையென அறிந்த இக்கல்வித் திருத்தங்களைக் காலந் தாழ்க்காது நிலைபெறச் செய்வதே முறையாக வேண்டும்.

மேலும், கல்வி மந்திரியார் காலந் தாழ்க்காது இலவசக் கல்வி முறையைப் பூரணமாக — யாவரும் எவ்விடத்திலும் — கைக்கொள்ளும்படி செய்யவேண்டும். சில வித்தியாசாலைகள் இன்னும் இலவசக் கல்வித்திட்டத்துள் வராதிருப்பது பெரிய குறையேயாகும். காலத்தை நீடித்து இவ்வித்தியாசாலைகட்கு இச்சலாக்கியத்தைக் கொடுத்தது மெச்சக்கூடியதாயில்லை. யாவர்க்கு மொப்பவன்றே கல்வி முறை நாட்டில் நிலைபெற வேண்டும். கற்றுக் கொடுக்கப்படும் கல்வியின் நோக்கம் மிக உயரியதாய், நிரந்தரமான பயனை மக்களுக்கு அளிக்கக்கூடியதாக வேண்டும். தாம் கற்றுக்கொள்ளும் கல்வியை உறுதுணையாகக் கொண்டு எவரும் தம் சீவியத்துக்கு உழைக்க வசதி பெறவேண்டும். அப்பொழுதன்றே நம் நாட்டின் பொருளாதார நிலையும் உறுதியடையும். அரசினரின்கீழ் இலிகிதர்களாக உத்தியோகம் பெறுவதே இப்போது கல்வி கற்கும் மாணவர்கள் யாவர்க்கும் இலக்காகவிருக்கின்றது. இந்தப் பிழையான மனப்பான்மை முற்றாக நீங்கவேண்டும். சாதாரண கல்வியுடன் தொழிற்கல்வியும் மாணவர் கற்கக்கூடிய வசதிகளை நமது வித்தியாசாலைகளில் ஏற்படுத்தவேண்டும். அப்போதுதான் விரும்பிய பெருநன்மையை நம் நாடு அடையக்கூடும்.

மற்றைய மந்திரிமார் யாவரிலும் கல்வி மந்திரியாரின் பொறுப்பு மிகவும் பாரியதென்பதை எவரும் அங்கீகரிப்பர். எத்தனையோ திருத்தங்கள் அவசியம் செய்து முடிக்கவேண்டியதாகின்றன. பிரதிநிதிகள் சபை அங்கத்தினர், இவ் விஷயத்திற் பெரிதும் அக்கறைகாட்டி உழைப்பது அவசியம். தமது தலைமைக்கும் ஸ்தானத்துக்கும் பங்கம் வராமற் பாது காப்பதை மாத்திரம் இவர்கள் இலக்காகக்கொள்ளாது, பொதுவாக நாட்டின் விருத்தியையே கருத வேண்டும். கல்வி முறைகள் ஏற்றபடி கைக்கொள்ளப்படுகின்றனவா என்பதைக் கவனிக்க வேண்டும். வித்தியாசாலைகள் ஏற்ற ஏற்ற இடங்களில் அமைக்கப்படுகின்றனவா என்பதை நோக்கவேண்டும். கற்றுக்கொடுக்கப்படும் கல்வி நாட்டின் வருங்காலத்துக்குப் பெருநன்மை பயக்குமா என்பதை ஆராய்தல் மிக அவசியமானதொன்று. சுதந்திரம் பெற்ற நம் நாடு இப்பொழுதே கல்வி முறையில் தவறின்றி முன்னேறிச் செல்லின், பின்னர்ச் சலிப்படைய வேண்டியதில்லை. கல்வியை ஆதாரமாகக்கொண்டே வேறுபல திருத்தங்களும் புனருத்தாரண இயக்கங்களும் தொழிற்பட வேண்டும். இதைக் கல்வி மந்திரிக்கு ஞாபகமூட்டி வைக்கின்றோம். சுயநலவாதிகளின் பேச்சுக்கு இடங்கொடாது தேசியமுறையிற் கல்வி விருத்தியை அமைத்துக் கொள்வதுதான் மந்திரியாரின் பெருங் கடனாக வேண்டும்!


---

## பயப்படவேண்டாம்!

ஆசிய நாடுகளின் மகாநாடு டில்லிமாநகரில் கூட்டப்படுவதைக் கண்டு ஐரோப்பிய நாட்டினர் அவசியமின்றிப் புகார் கிளப்புகின்றனர். இந்தோனேஷியா விஷயமாக ஒல்லாந்தர் நடந்துகொண்டதைக் கண்டிக்கவே இம் மகாநாடு கூட்டப்பட்டதென்பது யாவரும் அறிந்த விஷயம். ஐரோப்பிய வல்லரசினர் தமது ஏகாதிபத்திய முறைகளை இன்னுஞ் செலுத்தலாமென்று கனவு காண்பதாற் பயனில்லை. ஆசிய நாடுகள் ஒற்றுமையடைந்து இனித் தமது சுதந்திரத்தை நாட்டிக் கௌரவத்துடன் வாழ முன்வந்துவிட்டன. இந்தோனேஷியா தமது அதிகாரத்துள்ளிருந்து விலகின், தமது செல்வாக்கும் அதிகாரமும் குன்றி விடுமென்றே ஒல்லாந்தர் மனக் கவலை அடைகின்றனர். ஒல்லாந்தர்கள்போல் ஆசியாவில் நாடுகளைப் பிடித்து அரசாண்டு செல்வங்களைக் கவர்ந்தவரும் வேறு சில ஐரோப்பிய நாடுகளும், இந்த ஆசிய மகாநாட்டினைப் பயங்கரத்துடனும் மனப்புகைச்சலுடனும்நோக்குகின்றன. பிரான்ஸியர், போர்த்துக்கேயர், பிரிட்டிஷார் போன்ற ஐரோப்பிய அரசினர்க்கெல்லாம் இந்தோனேஷிய விஷயம் கண்விழிப்பினை உண்டாக்கும் என்பதிற் சந்தேகமில்லை. நவயுகம் பிறந்துவிட்டதென்பதை முன்னராக அறிந்தே பிரிட்டிஷார் இந்தியா, இலங்கை, பர்மா முதலிய நாடுகட்குச் சுதந்திரத்தை வழங்கினர். வழங்கப்படாதிருக்கும் மலாயா, போர்னியோ முதலிய நாடுகட்கும் விரைவில் அவ்வாறு செய்யவேண்டியதுதான். பிரிட்டிஷாரின் உதாரணத்தை நோக்கியாவது ஒல்லாந்தரும் பிரான்சியரும் நடந்துகொள்ளவேண்டாமா? இந்தோனேஷியா மக்கள் ஒல்லாந்தரின் கொடுமைகளை முழங்காலில்நின்று ஏற்றுக்கொள்ளமாட்டார். ஆசிய நாடுகளும் இதைப்பார்த்துக்கொண்டு நிற்கப் போவதில்லை. அன்னியர் ஆசியாவை அடிமைப்படுத்தி அங்குள்ள நாடுகளின் செல்வங்களைச் சூறையாடப் பார்த்துக்கொண்டு நிற்பதா? மேலும் இந்த ஆசிய மகாநாடு ஐரோப்பியருக்கு மாறாக எழுந்த ஸ்தாபனமாகுமென்ற கூச்சலுக்கும் ஆதாரமில்லை. ஆனால் ஏகாதிபத்திய முறையில் ஐரோப்பியர் ஆசிய நாடுகளை அடிமைப்படுத்தி அங்குள்ள செல்வத்தைக்கவரும் செயலுக்கு இம் மகாநாடு மாறானதென்று கூறின், அது பிழையன்று. ஐக்கியநாடுகளின் சங்கத்துக்கு இம் மகாநாடு எவ்விதத்திலும் விரோதமுடையதாகாது. அதன் உயரியநோக்கத்தையும் தொண்டினையும் பூர்த்திசெய்யவே இம்மகாநாடு கூட்டப்படுவதாகும். எனவே, இந்த உயரிநோக்குடன் நடக்கும் இந்த ஆசிய மகாநாட்டினைக் கண்டு ஐரோப்பிய நாடுகள் பயப்படவேண்டியதில்லை; பயப்படவேண்டியதுமில்லை.

---

# பாதை ஓரத்தில்




அந்தக்காலத்திலே தனவந்தர்களும் செல்வரக்குள்ள தலைவர்களும் பல்லக்குகளிற் பவனி வந்தனர். இவர்களைச் சுமந்து செல்வதற்கெனப் பல்லக்குச் சுமப்பவர்களுமிருந்தனர். யாழ்ப்பாணத்திலும் பல்லக்குக்காலம் ஒன்று இருந்தது இதற்குப்பின்னர் வெள்ளைக் குதிரை பூட்டிய பச்சைநிற வண்டியிற் செல்வதே கௌரவமெனக் கருதப்பட்டது. இரட்டைக் குதிரையென்றால் மதிப்பும் இரட்டிப்பு உயர்ந்துவிடுகின்றது.

இங்கிலாந்தில் இந்தக் காலத்திலும் அரச குடும்பத்தினர் குதிரைகள் பூட்டிய வண்டியில் இராஜ பவனி போவதையே பெரிய கௌரவமென மதித்துவருகின்றனர். அப்படியானால், பிரிட்டனைப் பின்பற்றிவரும் ஸ்ரீ லங்காவும் அவ்வாறு செய்யலாமல்லவா? உதாரணமாக இலங்கையிலுள்ள நகரசபைகளின் மேயர்மார் இரட்டைக் குதிரையைப்பூட்டி அழகு பார்க்கலாம். உதவி மேயர்மார் தங்களுக்கு மேயரிலும்பார்க்க மதிப்பு இருக்கின்றதென்பதை நாடறியச் செய்ய விரும்பினால் மூன்று குதிரைகளைப் பூட்டியும் சவாரி செய்யலாம். உலகம் மதிப்பிலேதான் தங்கியிருக்கின்றது.

❀

### சபைக்கு முத்திரை

யாழ்ப்பாணம் நகரசபை சமீபத்திற கூடிக் கலந்தபோது சபைக்கென ஒரு முத்திரை செய்தாகவேண்டுமெனத் தீர்மானித்தது. இதற்கான சித்திரங்களையும் பலரிடமிருந்து சபை எதிர்பார்க்கின்றது. இதில் யாழ் என்ற இசைக் கருவியே பொறிக்கப்படவேண்டுமென்பது நகர சபை செய்துள்ள முடிபாகும். வாசகர்களில் ஒருவர் பின்வரும் யோசனைகளையுங் கூறுகின்றார். அதாவது யாழுக்குப்பதிலாக இவற்றில் ஒன்றை விரும்பினால் ஏற்றுக்கொள்ளலாம்.

● பனங்கொட்டை: இதற்குத் தென்னிலங்கையிலும் நல்ல மதிப்பு இருக்கின்றது.

● இரு குருட்டுக் கண்கள்: கண்ணிழந்த யாழ்ப்பாடியைக் கௌரவப் படுத்துவதாகும். அத்துடன் ஐம்பதுக்கைம்பது போன்ற குருட்டுத்தனமான அரசியலையும இது ஞாபகமூட்டிவைப்பதாகும்.

● முருங்கைக்காய்க் கட்டு: இது யாழ்ப்பாணத்தவர்களின் சுவையான மரக்கறியென்பது உலகறிந்த விஷயம். அத்துடன் பக்கத்தில் நல்லெண்ணெப்ய் போத்தல் ஒன்றையும் சேர்த்துக்கொள்ளலாம்.

● சுருட்டுக்கட்டு: இது யாழ்ப்பாணத்தவர்களின் உயிரைப் பிடித்துக்கொண்டிருப்பதுடன் சிங்களரும் இதற்கு 'குவெனி', 'டயமன்', 'சுவீற்' 'கொறனேஷன்' எனப் பட்டங்கள் சூட்டிக் கௌரவப் படுத்துவதுடன் நில்லாது தங்கள் பணத்தையும் சாம்பராக்கி வருகின்றனர்!

அசலான யோசனைகள்; சந்தேகமில்லை.

### இடியேறு!!!

அரிசிப்பங்கிட்டிற் குறை ஏற்படக்கூடுமென அரசாங்கம் சமீபத்தில் எச்சரிக்கை செய்ததைக் கேட்டுக் கள்ளச் சந்தையிற் பணஞ் சேர்த்து உருசிகண்ட குபேரர்கள் தங்களிடமிருந்த அரிசிமூடைகளைப் பதுக்கி வைத்தனர். ஆனால் நிலைமை மோசமாகி விடாதெனவும் அரிசிக்கப்பல் இலங்கை வந்தடைகின்றதெனவுங் கேட்டவுடன் அவர்கள் இடியேறு கேட்ட சர்ப்பம் போன்று அடங்கிவிட்டனர். இவர்கள் இனித் தங்கள் விட(ய)த்தைக் கக்கவேண்டியதுதான்.

❀

### பசை அரிசி

கடந்த சில வாரங்களாகக் கிடைக்கும் 'கூப்பன்' அரிசி பசைப்பிடிப்பாகவே இருக்கின்றது. இது பானையில் ஒட்டுவதுடன் அகப்பையிலும் குடரிலும் ஒட்டிக்கொள்ளுகின்றது. களிபோலாகிவிடும் இவ்வரிசியைப் பிரதிநிதிகள்சபை அங்கத்தினர்கொழும்பிலேதங்கும் 'சிருவஸ்தி' என்ற இல்லத்திற் சமையல் செய்தபோது எங்கள் பிரதிநிதிகள் பலர் ஆவலுடன் அதைப் போட்டுப் பிடித்தனராம்.

---

## பிள்ளைகள் பெருகுதல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விங்கம் ஒரு பிரச்சினையைக் கிளப்பிக் குறித்த மசோதாவிலுள்ள சில அம்சங்கள் அரசியற் பிரமாணத்துக்கு மாறாக இருப்பதாகத் தெரிவிப்பார். அதாவது எந்த மதத்தினருக்காவது, வேறு தனிப்பட்டவர்களுக்காவது கட்டுப்பாடுகளையும் கூட்டங்களையும் சபை ஏற்படுத்தக் கூடாதென அரசியற் பிரமாணம் 29 (A) கூறுகிறதென்பதைச்சபையில் அவர் எடுத்துக் காட்டுவார்.

இதில் நியாயம் இருந்தாலும் சபைத்தலைவர் இதை நிராகரித்தே தீருவார் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

### சுதந்திர தின விழா

இலங்கை சுதந்திரம்பெற்ற முதலாவது ஆண்டு விழா (பெப்பிரவரி, 4) மிகச் சிறப்பாகக் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் நடைபெற்றுவருகின்றன.

---

## சக்தியற்ற யந்திரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுமென்பது மேயரின் கருத்தாகும்.

பின்னதாகப் பின்வரும் அங்கத்தினரை மூன்று நிர்வாகசபைகளுக்கும் சபையானது நியமித்திருக்கின்றது.

**நிதிச்சபை:** ஸ்ரீ சாம் ஏ. சபாபதி (மேயர்), ஸ்ரீமான்கள் ஆர். ஆர். நல்லையா, ஸி. பொன்னம்பலம், பி. காசிப்பிள்ளை, எஸ். சிவலிங்கம், ரி. எஸ். துரைராஜா.

**சுகாதாரச்சபை:** ஸ்ரீமான்கள் பி. எம். யோன், டி. ஜேம்ஸ், எஸ். ஆர். தளையசிங்கம், ஜே. செபஸ்தியாம்பிள்ளை, எஸ். எஸ். நவரத்தினம் (உதவி மேயர்), ஜனுப் எஸ். எம். எம். அப்துல்காதர்.

**தொழிற்சபை:** ஜனுப் எஸ். எம். அபூபக்கர், ஸ்ரீமான்கள் ஈ. ரி. ஹிச்கொக், டி. ஜேம்ஸ், பி. எம. யோன், ஏ. எம். புறாடி, ரி. எஸ். துரைராஜா.

நகரசபையின் பணம் யாவையும் இலங்கை வங்கியிற் போடவேண்டுமெனவுந் தீர்மானிக்கப்பட்டது. சபைக்கோர் முத்திரை வேண்டுமெனவும் யாழ் பொறித்த ஒரு பொது முத்திரை செய்ய வேண்டுமெனவும் முடிவுசெய்யப்பட்டது.

---

## புதிதாக எழுந்த ஆபத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திசை வல்லரசுகளின் அபிப்பிராயங்களை அறிய இவருக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தமாதிரி ஆசிய மகாநாடு கூடுவதுபற்று அவர்கள் அவநம்பிக்கையுடன் தான் இருந்தார்களென்று சொன்னார்.

ரோமுவு மேலும் கூறியதாவது: "ஏதோ ஆசியக் கோஷ்டி உருவாகிக்கொண்டிருக்கிறதெனவே அவர்கள் நினைத்தனர். அப்படித்தான் இருந்தாலென்ன? அதனால் பிசகு ஒன்றுமில்லையே.

"இந்த மாதிரியான ஒரு மகாநாட்டைக் கூட்டியதின் மூலம் பிரதமர் நேரு உலக சமாதானத்துக்கு ஒரு சேவை செய்துள்ளார்.

---

### சேர் சாப்ரூ காலமானுர்

இந்தியாவின் தலைசிறந்த சட்ட நிபுணரும் மிதவாதக் கட்சித் தலைவருமான சேர் தேஜ் பகதூர் சாப்ரூ இம்மாதம் 20-ந் திகதி காலமானுர்.

---


## பண்டித கலாசாலை, யாழ்ப்பாணம்

பரமேசுவரக் கல்லூரியில் இக்கலாசாலை ஜனவரிமீ 31உ திங்கட்கிழமை காலை 11 மணிக்கு ஆரம்பிக்கப்படும்.

தமிழ் S. S. C. பரீக்ஷையில் தேறிய மாணவர்கள் இக் கலாசாலையிற் சேரத் தகுதியுள்ளவர்கள்.

மூன்று ஆண்டுகளில் தமிழில் பண்டித பரீக்ஷைக்கும் ஆங்கிலத்தில் S. S. C. பரீக்ஷைக்கும் ஆயத்தம் செய்தற்குரிய பாடத்திட்டத்தின்படி இக்கலாசாலை மாணவர்கள் பயிற்றப்படுவார்கள். பாலபண்டித வகுப்பும் நடத்தப்படும்.

இக்கலாசாலையிற் சேர விண்ணப்பஞ்செய்வோர் தங்கள் வயதைக் குறிப்பிட்டெழுதவேண்டும்.

யாழ்ப்பாணம்
20-1-49

சு. நடேசபிள்ளை
பரமேசுவரக் கல்லூரி அதிபர்

[3596]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசியமக்கள் எழுந்தனர்!

## ஐரோப்பியர் படபடப்பு

இந்தோநேஷிய மக்கள் படும் துயரைக் கண்டு பிரதமர் பண்டித நேரு ஆசிய மகாநாட்டினைக் கூட்டியுள்ளார். இம் மகாநாடு புது டில்லியில் நடைபெறுகின்றது. இலங்கையும் இதிற் கலந்துகொள்ளுகின்றது. இம் மகாநாட்டினைக்கண்டு சில ஐரோப்பிய இராச தந்திரிகள் அச்சமுற்றுப் புகார்களைக் கிளப்புகின்றனர். ஐக்கியநாடுகள் சங்கத்துக்கு இச்சங்கம் மாறாகக் கிளம்பியுளதென்கின்றனர். இந்தப் பொய்யான அபவாதத்துக்குச் சிறிதும் ஆதாரம் கிடையாது என்றார் பிரதமர் நேருஜி. இச் சங்கம் ஐக்கிய நாடுகள் சங்கத்திற்கு ஆதாரமளிக்குமேயன்றி அதற்கு மாறாகச் செல்லமாட்டாது. ஆசிய மக்களின் நோக்கத்தை மிகத் தெளிவாக இச்சங்கம் எடுத்துக்காட்டி ஐரோப்பியரின் பிழையான மனப்பான்மையை இச்சங்கம் கண்டிக்குமென்பதில் தடையில்லை. ஏகாதிபத்திய நோக்குடன் இனி ஆசிய நாடுகளை ஐரோப்பிய அரசினர் ஆளலாமென்ற எண்ணத்தை முற்றாக விடவேண்டியதுதான். ஆசிய நாடுகளின் செல்வத்தை இதுவரையுங் கவர்ந்து அனுபவித்த ஐரோப்பிய வல்லரசினர்க்கு இது சங்கடமான விஷயமேயாகும். எப்படியாயினும் விட்டு விலகவேண்டிய காலம் வந்துவிட்டது. இவ் விஷயத்தை வற்புறுத்தவே ஆசிய நாடுகளின் மகாநாடு டில்லியில் கூடுகின்றது. ஆக்கிரமித்துச் செல்வங்களைச் சுரண்டும் நோக்கம் ஐரோப்பிய நாட்டினர்க்கு இல்லையாயின் இந்த மகாநாட்டினைக்கண்டு ஐரோப்பியநாடுகள் எதற்காகப் படபடக்க வேண்டும்?

### தென்னாபிரிக்காவில்

தென்னாபிரிக்காவில் இந்தியர் பெருந்தொகையாகக் கொலைசெய்யப்பட்டனர். இதுவரையில் 300 பேருக்குமேல் உயிர் துறந்தனரென்றும் 2000 பேருக்குமேல் காயமடைந்தனரென்றுங் கூறப்படுகின்றது. ஆபிரிக்க வாசிகளாகும் ஜுலு என்னும் வகுப்பினருக்கும் இந்தியர்க்கும் வாக்குவாதமேற்பட்டுப் பெருங் கலகமாக முடிந்தது. இக் கலகத்துக்குப் பல காரணங்கள் கூறப்படினும் ஆரம்ப காரணம் யாதென்பது இன்னும் முற்றாக அறியப்படவில்லை. இக்கலகம் இப்போது ஓரளவுக்கு அடங்கியுளதாயினும் இன்னும் இருவகுப்பினர்க்குமிடையிலுள்ள ஆத்திரமும் துவேஷமும் நீங்கினபாடில்லை. சுதந்திரம்பெற்ற இந்தியாவின் மக்கள் இவ்வித நிலையை அடைய வேண்டி வந்தது பெரிதும் வருந்தத்தக்கது. மேலும் மகாத்மா காந்தியடிகள் முதன் முதலாக அஹிம்சையை மேற்கொண்டு சத்தியாக்கிரகத்தை நடத்திய நாட்டில் இது சம்பவித்தது பெரிய அதிசயமாகின்றது. இச் சம்பவம் தென்னாபிரிக்க அரசினரின் மனநிலையில் எவ்வளவு சம்பந்தமுடைத்தென்பது விரைவில் அறியவரும்.

### ஆர். எஸ். எஸ்.

இச்சங்கத்தினரை இந்திய அரசினர் சட்டதிட்டங்களை இயற்றி அடக்கிவருவது யாவரும் அறிந்த விஷயம். இந்துக்களின் பழைய உரிமைகளையும் பெருமைகளையும் மறுபடி இந்தியாவில் நிலைநாட்ட எழுந்த இச்சங்கம் பலாத்கார முறைகளைக் கையாண்டு நாட்டில் வகுப்புத்துவேஷத்தைக் கிளப்பியதாற்றான் அரசினர் இச்சங்கத்தை அடக்க முற்பட்டனர். முஸ்லீம்களை முற்றாக ஒழித்து இந்து இராச்சியத்தை காட்டுவதே இச் சங்கத்தின் அடிப்படையான கொள்கை. ஆனால் இந்திய அரசினர் இந்த வகுப்புவாதக் கொள்கைகட்கு எப்படி உடன்படுவரோ. சாதி சமயம் முதலியவற்றைப் பாராட்டாது யாவர்க்கு மொப்ப அரசியலை நடத்துவதே தமது கொள்கையென காங்கிரஸ் அரசினர் பன்முறை எடுத்துக்கூறிவிட்டனர். ஆகவே இந்த ஆர். எஸ். எஸ். ஸ்தாபனத்தினரின் வகுப்புவாதக்கொள்கைகட்கு அரசினர் இடங் கொடுக்கமாட்டார்கள். இவர்கள் வகுப்புத் துவேஷத்தை ஒழித்துத் தமது சாகியத்தவரின் கல்வி, நாகரிகம், கலாசாரம், சமுதாய வாழ்வு என்பனவற்றிற்கு உழைக்கக்கூடாதா என்று பண்டிதர் நேரு கேட்கின்றார். இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர் தமது கொள்கைகளை மாற்றி நாட்டில் சமாதானத்தை நிலவச் செய்வதே முறை. அடாததும் என்றும் நடக்க வியலாததும் ஆகிய துறைகளில் அவமே காலத்தை ஏன் போக்க வேண்டுமோ?

### காஷ்மீர்

இங்கே நடந்த யுத்தம் ஒருபடி நிற்பாட்டப்பட்டது பெரிய காரியமென்றே சொல்லவேண்டும். அடுத்தபடியாகச் சன சம்மதம் அறியும் விஷயமாக வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற வேண்டும். விசாரணைச் சபையினர் வெளியிட்ட நிபந்தனைப்படி பாகிஸ்தான் அரசினர் படைவீரரும், எல்லைப்புறக் கொள்ளையடிகாரரும் முதலாவதாகக் காஷ்மீர் பிரதேசத்தினின்று வெளியேறவேண்டும். அப்போதுதான் சனசம்மதம் அறிவதற்கு வசதிகள் ஏற்படும். இந்திய அரசினர் ஒவ்வாத முறைகளை அனுட்டித்துக் காஷ்மீர் சமஸ்தானத்தைத் தமக்குள் கொண்டுவர விரும்பவில்லை. இப்போது காஷமீர் பிரதம மந்திரியாகும் ஷேக் அப்துல்லா அவர்கட்கு இச் சமஸ்தானத்தில் மிக்க ஆதிக்கமுண்டு. அவர் எண்ணமே நிடப்படும் என்பது பலர் அபிப்பிராயம்.

### நல்லிணக்கம்

பாகிஸ்தான் இந்தியா ஆகிய இரு அரசினர்க்கிடையிலும் நல்லிணக்கம் சிறிது சிறிதாக ஏற்பட்டு வருவதாவது நற்கால அறிகுறியென்றே கூறவேண்டும். எத்தனையோ பெரிய விஷயங்களில் இரு அரசினரும் சங்கடமின்றியும் வாக்குவாதமில்லாமலும் இணக்கத்துக்கு வந்தமை

### - இந்தியா -

பெரிதும் புகழப்படவேண்டிய விஷயம். பாகிஸ்தான் உண்மையாக நடந்துகொள்ளின் எல்லாம் நன்மையாக முடியாதிருப்பதெப்படி. காஷ்மீர் விஷயமாக ஏற்பட்ட யுத்த நிறுத்தமும் பெரிய நன்மையைப் பயப்பதாயிற்று. மேலும் சன சம்மதத்தைப் பெற்று அதன்படி நடக்க இருநாட்டு அரசினரும் உடன்படினும் இவ்விரு நாடுகட்கும் பெரிய சிறப்போடு கூடியதாகுமன்றோ. பலாத்காரத்தால் அல்லது போலிப் பிரசாரத்தால் உரித்தாகாத தன்மையைப் பெறுவது எப்படியாகும். இந்த உண்மையை ஆரம்பத்தில் பாகிஸ்தான் உணர மறந்துவிட்டது. நடுநிலை தவறாது எதையுஞ் செய்வதில் இந்தியா பின்வாங்கமாட்டாது. இதனை உலகம் நன்கு அறியும்.

---



## நமது வாசிகசாலை

**நம்பியகவல்**—பாட்டுங் குறிப்புரையும்; ஆசிரியர்: புலவர் பாண்டியனார். பிரசுரம்: மதராஸ் ரிப்பன் வெளியீட்டு நிலையம், இராமச்சந்திரபுரம். விலை: குறிக்கப் படவில்லை.

இந்நூல் வடமொழியிலுள்ள பகவற்கீதையின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இங்கு நம்பி யென்பது திருமாலின் அவதாரமாகிய கண்ணனைக் குறிக்கும். வடமொழி முதல் நூலிலுள்ள 701 பாட்டுக்களை இவ்வாசிரியர் 604 அகவற் பாக்களால் மொழி பெயர்த்துக் குறிப்புரையுடன் வெளியிட்டுள்ளார்.

பகவற்கீதையை இங்ஙனம் மொழிபெயர்த்ததன் நோக்கம் ஆசிரியர் எழுதிய முகவுரையால் நன்கு விளங்கும். தமிழர்க்குப் பிறப்புரிமையாகிய மெய்யுணர்வு, புணர்ப்பு முதலியவற்றைக் கூறும் பண்டைத் தமிழ் நூல்களும், சங்ககாலத்திருந்தனவெனக் கருதத்தகும் பகவற்கீதையின் செந்தமிழ் மொழிபெயர்ப்பு நூலும் பிற்றைஞான்று இறந்தனபோலும் என்று கருதும் இவ்வாசிரியர் அக் குறைநிரம்பித் தமிழ் மொழி வளம் பெறும்பொருட்டு பகவற்கீதையை தனித் தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ளார்.

இம் மொழிபெயர்ப்புநூல் பாட்டும் குறிப்புரையுமாக அமைந்துளது. மூலம் பண்டைய சங்க நூல்களின் நடையில் அமைந்துளது. இப் பாட்டுக்களின் ஓசை, சொல்லமைதி முதலியன இவ்வாசிரியர்க்கு தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம் முதலிய பண்டைத் தமிழ் நூல்களிலுள்ள புலமைக்கும் ஆர்வத்திற்கும் சான்று பகர்வன.

இயல்பாகவே சற்றுக் கடினமான பொருள்பற்றிய இந்நூல் சங்கநூல் நடையில் அமைந்துள்ளமையின் ஆசிரியர் செவ்விய முறையிற் குறிப்புரையும் எழுதியுள்ளார். இக் குறிப்புரையும் பழைய உரைகளைப்போன்று வடமொழிக் கலப்பின்றித் தனித் தமிழ் நடையிலேயே அமைந்துளது. மேலும் இக் குறிப்புரை வடமொழி பகவற்கீதைக்குள்ள விரிவுரைகளைப்போன்று அகலவுரையாக இல்லாமலும் மிகச் சுருக்கமாக இல்லாமலும் இன்றியமையாத பொருள்களை விளக்கிச் செல்வதாய் அளவு பட்டுள்ளது. இக் குறிப்புரை முதல் நூலுக்கு ஸ்ரீ சங்கரர், இராமானுசர், மத்வர் ஆகிய ஆசிரியர் வரைந்த விரிவுரைகளில் எதையும் சான்றுகொண்டெழுதப்பட்டதன்று; இவ்வாசிரியர் தமது கோட்பாடுபற்றித் தாமே கண்ட உரையாகும்.

இந் நூலின் மொழிபெயர்ப்பமைதியைப்பற்றிக் கூறுமிடத்து ஒரு மொழியிற் செய்யுளமைந்ததைப் பிறிதொரு மொழியிற் செய்யுள் வடிவில் மொழி பெயர்க்கும் ஆசிரியர்க்குரிய உரிமையெல்லையை இகவாது முதல் நூற் கருத்து வேறுபடாது மொழிபெயர்த்துள்ளதாகவே கருதுவர். மொழிபெயர்ப்பாசிரியர்க்குள்ள சுதந்தரம் முழுவதையும் பயன்படுத்திக்கொண்டுள்ளார் என்பது இதனால் விளங்கும். இதைக்குறித்து "மொழி பெயர்ப்புப் பிழைத் துளதாமெனக் கோடுமென் பார்க்கொன்று கூறுதும். அற்றேலஃதாக மெய்யுணர்வு விழைவார் இதனை யாம் ஒருவாற்றுற் கண்ட நூலெனவே கொண்டாயினு மிதின்கட் பொருள்கண்டு தின்ந்து தெளிதலே யாமிந் நூல் செய்த கருத்தாகும்,'' என்று ஆசிரியர் முகவுரை கூறியமை ஈண்டு குறிக்கற்பாலது.

இந் நூலின் முகவுரையையும் நூலின் சில பல பகுதிகளையும் ஒருமுறை படிப்பவர்களுக்கு ஆசிரியர் மேற்கொண்ட உலையா முயற்சியும் அவரிடம் இயல்பாயமைந்த தமிழார்வமும் நன்கு புலப்படாமற் போகாது. இது போன்ற பொருள்பற்றி குறிப்புரையுடன் அவர் செய்துள்ள ஏனைய இரு நூல்களும் இந்நூல்போன்று செவ்விய முறையில் அச்சிட்டு வெளிவருமாறு தமிழன்பர்கள் ஆசிரியரை ஊக்குவார்களாக.

அ. சே. சு.

**காண்டிபம்**—பொங்கல் மலர்: ஆசிரியர்: எஸ். எஸ், மாரிசாமி; பிரசுரம்: "தினசரி" வெளியீடு த. பெ. 518 சென்னை 3. தனிப்பிரதி விலை: ரூ. 1-0-0.

இம்முறையும் பொங்கல் திருநாளில் காண்டிபம் மலர்ந்திருக்கிறது. காண்டீபம் விமர்சனையில் நான் சென்ற வருஷம் சொன்னதுபோல் இம்முறையும் படித் ... விஷயங்களுக்கு மலரில் முதன்மை கொடுத்திருக்கிறார்கள். இதை ஏனைய பத்திரிகைக்காரர் கொஞ்சம் கவனிக்கவேண்டும்.

கதைவளம் பெருகிய பத்திரிகைகளை வாசித்து அலுத்துப்போன சிலருக்கு, சென்னை அரசாங்கத்துப் பொருளாதார ஆலோசகராகிய டாக்டர், பா. நடராசன் அவர்கள் எழுதியுள்ள வரப்புயர வளம்பெருகும் போன்றவிஷயங்கள்; செவிச்சுவை, உலகம் உருப்படுமா? போன்ற சிந்தனையைக் கொஞ்சம் தூண்டிவிடக்கூடிய அம்சங்கள், பூரண திருப்தியைக் கொடுக்கின்றன.

இந்த மலரிலே ஏராளமான கதைகளுமிருக்கின்றன.

கி. வா. ஜகந்நாதனின் விசித்திர உலகம் கை தேர்ந்த சிற்பியினால் வார்க்கப்பட்ட விக்கிரகம்போல் எல்லா அழகும் அமைந்து விளங்குகிறது. இராஜ அரியரத்தினம் அவர்களின் சுகதபாலா என்னும் கதையை வாசிக்கையில் இடையில் தயங்கிநின்று கதாபாத்திரங்களை நன்றாய் பார்க்கவேண்டுவதுபோல் தோன்றுகிறது—அவர்களுடன் பேச மனம் அசைகிறது. அவர்கள் சொல்வதைக் கேட்டுக், கொஞ்சம் சிரிப்பும் வருகிறது. இந்த அனுபவத்தினால் உண்டான மன நிலையிலே மேலும் கதையை உயாராய் வாசிக்கத் தொடங்குகிறோம். கதைக்குப் பக்கபலமாய் நிற்கும் 'சாணு'வின் படங்களையும் இடைக்கிடை பார்த்துக்கொள்ள விருப்பமேற்படுகிறது. உண்மையில் அரியரத்தினம் அவர்கள் மிகவும் சாதுர்யமாய்த்தான் கதையைச் சொல்லுகிறார்.

வாசகர்களின் கண்களைக் கவரக்கூடிய பல விஷயங்களைக் காண்டிபம் கர்த்தாக்கள் கவனிக்கவில்லை: தாரா சௌதரியின் பரதநாட்டிய அபிநயங்களைப் போன்ற கலா விஷயங்கள் இன்னும் பல சேர்த்திருக்கலாம். என்றாலும், மங்களமான பொங்கல் பெருநாளில் புஷ்பித்திருக்கும் இந்த மலர் பல அம்சங்களில் சிறந்து விளங்குகிறது.

—சி. வைத்தியலிங்கம்

**காலச்சக்கரம்**: பொங்கல்மலர் 1949. ஆசிரியர்கள்: கே. எஸ். பெரியசாமி, எம். மகாலிங்கம். பிரசுரம்: வன மலர்க் கழகம், தபால்பெட்டி இல. 232, கோயமுத்தூர். தனிப்பிரதி விலை ரூபா 1-0-0.

கோவையிலிருந்து வெளியாகும் காலச்சக்கரம் வாரப் பத்திரிகையின் ஓராண்டுப் பூர்த்தி இதழ் பொங்கல் மலராக வெளிவந்துள்ளது. அனைத்தும் நாராயண சொரூபம் என்பதை அரங்கநாதன்மூலம் சுவாமி சித்பவாநந்த விளக்கியுள்ளார். புலவர் செய்த சோதனையை கி. வா. ஜகந்நாதன் ஆராய்ந்துள்ளார். 'ஜீவா'வின் வானம் வெளுத்தது என்ற சிறு கதை உள்ளத்தைக் குழையச் செய்கின்றது. புதுமைப்பித்தன் கலைபற்றி சு. கி. ஆராய்ந்துள்ளார். 'செந்தாமரை', பெ: தூரன், கு. அழகிரிசாமி, வல்லிக்கண்ணன், ரா. கி. ரங்கராஜன், சுவாமி சுத்தானந்தர் உட்படப் பிரபல எழுத்தாளர்கள் மலரை அணிசெய்கின்றனர். கலையின்மூலம் வெளியாகும் அகண்ட நிலையில் நமக்கு ஏற்படும் நாட்டத்தை கசப்பும் இனிப்பும் என்ற இலக்கியக் கட்டுரையில் ஆசிரியர் முத்துசிவன் விளக்கியுள்ளார். ஒழுக்கம், பண்பாடு என்ற போர்வைக்குள் சமூகத்தில் நடந்துவரும் பெரிய காரியங்களை 'ஆசீர்வாதம்' என்னும் சிறுகதைமூலம் ஸ்ரீ இராஜ அரியரத்தினம் அவர்கள் அம்பலப்படுத்தியிருக்கிறார். அத்துடன் இலங்கையின் கல்வி நிலையையும் இக் கதையை வாசிப்பவர்கள் ஓரளவுக்கு அறிய முடிகிறது.

அட்டைச்சித்திரம் அழகாக அமைந்தவிடத்தும், அச்சுவேலை போதியளவு சிறப்புறவில்லை. இம்மலரின் விலையும் உயர்வாக இருக்கின்றது.

— சி. க. வி.

### வரப்பெற்றோம்

**குண்டூசி 1949 கலண்டர்**:— பிரசுரம்: குண்டூசி 246 தம்புசெட்டி வீதி, சென்னை 1.

சினிமாப் பத்திரிகையாகிய குண்டூசி காரியாலயத்தாரால் சினிமா நட்சத்திரங்களின் படங்களுடன் அமைக்கப்பெற்ற அழகான கலண்டர் கிடைக்கப் பெற்றோம்.

## தமிழ்நாட்டு அன்பர்களுக்கு:

எனது பெயரைச் சூட்டிக்கொண்டு யாரோ ஒருவர் மாயவரத்திலும் வேறு சில இடங்களிலும் தங்கிச் சென்னையிலுள்ள பத்திரிகை ஆசிரியர்களிடமும் ஏனைய பத்திரிகைக்காரர்களிடமும் தபால்மூலம், பணம் ஏமாற்றிப் பெறுகின்றார் என அறிகின்றேன். இந்த மோசடிபற்றி அன்பர்களைக் கவனமாக இருக்கும்படி வேண்டுகின்றேன்.

ஈழகேசரி நிலையம் இராஜ அரியரத்தினம்
சுன்னாகம், இலங்கை 20-1-49

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாதி மத வேற்றுமை

### மன்னிக்கமுடியாத குற்றம்

காரைநகர் மணிவாசக சபையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா, 14-1-49 வெள்ளிக்கிழமை, காரைநகர் இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஷை சபைத் தலைவர் திரு. வே. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் பீற்றர் கெனமனும், அகிலஇலங்கை ஆசிரியர் சங்கத்தலைவர் திரு ஏ. ஈ. தம்பரும் இவ்விழாவின் சார்பாகச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

ஐக்கியதேசியக்கட்சியும், அதனுடன் சேர்ந்த தமிழர் காங்கிரசும் தாழ்த்தப்பட்டோர் சம்பந்தமாக ஒன்றுஞ் செய்யவேயில்லை. இலங்கையிலுள்ள கட்சிகளில் கொம்மியூனிஸ்ட் கட்சியே தாழ்த்தபபட்டவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சமமான முறையிற் பாடுபட்டுவருகின்றது. இந்த நாட்டிலுள்ள எல்லோரையும் தாழ்த்தப்பட்டோர் விஷயத்தில் அக்கறை செலுத்துமாறு எங்கள் கட்சி கேட்டுக்கொள்ளுகின்றது. ஜனநாயகம் உள்ள நாட்டில் கட்சி வேற்றுமை, சாதிவேற்றுமை, மதவேற்றுமை, பாஷை வேற்றுமை முதலியனவற்றைப் பார்ப்பது மன்னிக்கமுடியாத ஒரு பெரியகுற்றமாகும்.

தலைவர் தமது தலைமைப் பேருரையில் கூறியதன் சாரமாவது:

ஒரு நாட்டு முன்னேற்றத்திற்கு மதமே பிரதானமானது. அதுவே நாட்டின் உயிர் நாடி. மதத்தோடு கலந்த சமூக அரசியல் காரியங்களே உண்மையான பலனளிக்கும். ஆத்மீக உணர்ச்சி இல்லாத நாடு ஒருபோதும் முன்னேற்றமடையமாட்டாது. இதன் காரணமாகவே காந்தி அடிகள் தமது அரசியல் கொள்கைகளாகிய கட்டடங்களை மதம் என்னும் அத்திவாரத்திற் கட்டியெழுப்பினுர். இதனுலேயே அவரது கொள்கைகள் சிரஞ்சீவித்துவம் பெற்றுவருகின்றன.

தற்போதைய அரசியல்வாதிகள் மதத்தையும் அரசியலையும் வெவ்வேறு கோணங்களிலிருந்து பார்க்கிறுர்கள். இது மிகவும் வெறுக்கத்தக்கதாகும்.

ஸ்ரீமத் வடிவேலுச் சுவாமியார் அவர்கள் 'தாயுமானவர்' என்னும் விஷயம் பற்றியும், பண்டிதர் க. ச. ஆனந்தர் அவர்கள் 'சீதையும் சூர்ப்பணகையும்' என்னும் விஷயம் பற்றியும் சொற்பொழிவுகள் ஆற்றினுர்கள். —கடிதம்

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

**Subramaniam Selvadurai** —*Petitioner*

*Testamentary Jurisdiction* } No. 962

*Vs.*

1. **Ambikaidevi**
2. **Visuvanathan**
3. **Vasanthadevi** all children of S. Selvadurai
4. **Valliammai** widow of Nagamuttu Nagalingam —*Respondents*

In the matter of the Estate of the late **Nagaratnammah** deceased, of Araly West, Vaddukoddai.

This matter coming on for disposal before R. R. Selvadurai Esq. District Judge, Jaffna on the 11th day of November, 1948, in the presence of Mr. S. V. Somasundram, Proctor on the part of of the petitioner, and the affidavit of the abovementioned petitioner dated 3rd November 1948 having been read:

It is further declared that the said Valliammai widow of N. Nagalingam 4th respondent, be appointed guardian-at-litem over the 1st, 2nd & 3rd respondents and that the said Subramaniam Selvadurai, Petitioner be declared entitled to have letters of administration issued to him accordingly unless the respondents or others shall on or before the 15th day of December, 1948 show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

This 24th day of November 1948

(Sgd.) **R. R. Selvadurai**
*District Judge*

[3591-ii]

## சதானந்த வித்தியாசாலை

அளவெட்டி சதானந்த வித்தியாசாலையின் ஸ்தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் 12-1-49 புதன்கிழமை மாலை வடமாகாண வித்தியாதிகாரி திரு.சி. உ. சோமசேகரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. பாடசாலை அதிபர் திரு. அ. பொன்னுத்துரை அவர்கள் பாடசாலையின் 18வது ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்தார்.

தலைவர் பேசுகையில் தொழிற் கல்வியின் இன்றியமையாமையை விளக்கிவிட்டு சதானந்த வித்தியாசாலை போன்ற கழகங்களே எதிர்கால இலங்கையின் கலைவளர்ச்சிக்கு நற்பணியாற்றுந்தகுதி வாய்ந்தனவெனக் குறிப்பிட்டதோடு அப்பாடசாலை முகாமைக்காரரும் ஆசிரியரும் எடுத்து வருஞ் சிரத்தைக்காக அவர்களைப் பெரிதும் பாராட்டினுர்கள்.

ஸ்ரீமதி சி. உ. சோமசேகரம் அவர்கள் மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கினுர். பாடசாலைச் சிறுமியரால் ஸ்தாபகர் ஞாபகார்த்தப் பாக்கள் பாடப்பட்டன.

திருவாளர்கள் கா. சண்முகம் நம — சிவப்பிரகாசம் ஆதியோர்களும் பாடசாலையின் ஸ்தாபகர் திரு. செ. நாகலிங்கம் அவர்களின் சேவைகளைப்புகழ்ந்து பாராட்டினர். கூட்ட ஆரம்பத்தில் பாடசாலை மாணவி ஒருவரால் ஆங்கிலத்திற் கூறப்பட்ட வரவேற்புரை அம் மாணவியின் ஆங்கிலப்பேச்சுத் திறமையை எடுத்துக் காட்டுவதோடு பாடசாலையின் ஆங்கிலவளர்ச்சியையும் நன்கு அறியத்தக்கதாயிருக்கிறதென திரு.சண்முகம் அவர்கள்குறிப்பிட்டார். வித்தியாதரிசிதிருஎஸ்.இராமலிங்கம் அவர்கள் பேசுகையில் அப்பள்ளிக்கூடம் தமது மனதைக் கவர்ந்த பாடசாலைகளில் ஒன்றெனக் குறிப்பிட்டார்.—சடி.

## புதிய திறை அதிகாரிகள்

சென்றுண்டு செப்டம்பர் மாதத்தில் அரசாங்கம் நடாத்திய திறை அதிகாரிகள் (டி. ஆர். ஓ.) பரீட்சையில் 9 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் மூவர் தமிழர்கள். அவர்களின் பெயர்கள் வருமாறு: 1. பி. ஏ. ஜே. காசிநாதர். 2. என். மாணிக்கானந்தராஜா. 3. எஸ். சண்முகசுந்தரம்.

## சாவகச்சேரி பட்டினசங்கம்

### புதிய தலைவர்

சாவகச்சேரி பட்டினசங்கத்தின் புதிய தலைவராக வழக்கறிஞர் ஸ்ரீ எஸ். கே. திரவியநாயகம் அவர்கள் சென்றபுதன்கிழமை(19-1-49) போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார். உபதலைவராக ஸ்ரீ, எஸ். கந்தையா சிவம் தெரிவுசெய்யப்பட்டார்.

## கிராமச்சங்கத் தலைவர்

சாவகச்சேரி கிராமச்சங்கத் தலைவர் பதவிக்கு ஆசிரியர்கள்: வி. தியாகராசாவும், வி. சுப்பையாவும் போட்டியிட்டனர். இதில் ஸ்ரீ தியாகராசாவே வெற்றிபெற்றுர். உபதலைவர் பதவி மீசாலை ஸ்ரீ கே. மயில்வாகனத்துக்குக்கிடைத்தது.

## காலி இந்துமகாசபை

ஷை சபையின் பொதுக் கூட்டம் தைப்பொங்கலன்று (14-1-49) பிற்பகல் 7 மணியளவில் காலிநகர்ச் சிவன்கோயில் மண்டபத்தில் ஆரம்பமானது. 'முருகவழிபாடு' என்னும் பொருள்பற்றிப் பண்டிதர் திரு எஸ். அருளம்பலம் அவர்களும் 'பக்திப் பொங்கல்' என்னும் பொருள் பற்றி முதலியார் திரு செ. சின்னத்தம்பி அவர்களும் உபந்நியாசஞ் செய்தார்கள்.


அநேகர் காத்திருந்து பெற்றுக்கொள்வதும் நல்லது என்று எண்ணுகின்றனர்.

டொக்டர்
M. R. சொஹேறாரோ
கை மார்க் (Hand Brand)
றிஜிஸ்ரேட் நம். 988

**கூந்தல் தைலம்**

5 நிமிஷங்களில் நரைத்த மயிரைக்கறுக்கச்செய்கிறது
பிரிட்டனில் தயாரிக்கப்பட்டது.
கெடுதி விளைவிக்காதது.

முன்போலவே
1 போத்தல் ரூ. 1-50
தபாற் செலவு சதம் 30

ஏமாருதிருப்பதற்காக ஏற்கனவே உங்கள் தேவையை அறிவியுங்கள்.

முழு விநியோக உரிமையாளர்:
**H. B. & Co., Calcutta**
இலங்கையில் விற்பனையாளர்கள்:
**Hector, Mather & Co.,**
19–21, Grandpass Road
COLOMBO
[3595]


## திருக்கேதீஸ்வர ஆலயம்

### திருப்பணிச் சபை

மேற்படி சபையின் காரிய நிர்வாகசபைக் கூட்டமொன்று சமீபத்தில் பம்பலப்பிட்டி பழைய கதிரேசன் கோயிலிற் கூடியது. அக் கூட்டத்தில் திருக்கேதீஸ்வரத்திற்குச் சுவாமிதரிசனஞ்செய்யும் பொருட்டுச் செல்லும் யாத்திரீகர்களின் வசதிக்காக இப்பொழுது அமைக்கப்பட்டுவரும் மடத்திற்கு திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் மடம் எனப் பெயர்இடப்படவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. மடத்தின் ஒருபாகம் தை அமாவாசை (28-1-49)த் தினத்திற்கு முன் கட்டிமுடிக்கப்படுமென நிச்சயிக்கப்பட்டது. இலங்கையின் பலபாகங்களிலுமிருந்து சுவாமிதரிசனத்தின் பொருட்டு அங்குச் செல்லும் சைவ நன்மக்கள் திருவருட் பொலிவால் நீர்தேங்கி நிற்கும் பாலாவித் தீர்த்தத்தில் நீராடி அன்றைய நிகழ்ச்சிகளை ஆரம்பிப்பார். அதன்பின் ஆலயத்தில் விசேட பூசையும் தோத்திரபாராயணமும் சமயசம்பந்தமான சொற்பொழிவுகளும் நடைபெறும்.

அன்றைய விழாவுக்கு வேண்டிய ஒழுங்குகளைத் திருக்கேதீஸ்வர ஆலயத்திருப்பணிச் சபையினரும் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரும் சேர்ந்து செய்து வருகின்றரெனத் தெரிவிக்கப்பட்டது.

## நெடுந்தீவு மேற்கு

### இளைஞர் ஐக்கியசங்கம்

நெடுந்தீவு மேற்கு, இளைஞர் உத்தமவாழ்க்கை ஐக்கிய சங்கத்தின் 3 வது வருடாந்தக் கூட்டம் சமீபத்தில் மேற்படி சங்கவாசிகசாலையில் ஆசிரியர் திரு. மு. சின்னத்துரை அவர்களின் தலைமையில் நடைபெற்றது. காரியதரிசியின் அறிக்கை தனுதிகாரியின் வரவுசெலவுத் திட்டங்கள் வாசிக்கப்பட்டு அங்கீகாரமானதும் கீழ்வருமாறு புதிய உத்தியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டனர்.

ஆசிரியர் திரு மு. சின்னத்துரை தலைவர், திரு சு. குமாரசாமி உபதலைவர் பண்டிதர் திரு நா. கந்தையா காரியதரிசி, திரு த. அம்பலம் உபகாரியதரிசி, திரு. ஆ. தாமோதரம்பிள்ளை தனுதிகாரி ஆசிரியர் திரு. மு. குணசிங்கம் பரிசோதகர். இவர்களுடன் வேறு ஐவர் நிருவாக சபை அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். பின் சங்கத்தின் நடைமுறைக்கான பிரேரணைகள் நிறைவேறின.

பண்டிதர் நா. கந்தையா அறிவு விருத்தி தேகப்பயிற்சி ஒழுக்கங்கள் பொருளாதாரத் துறைகள் என்பவற்றில் இளைஞர்களைத் தக்கமுறையிற் பயிற்றுதலே இச்சங்கத்தின் முக்கிய இலட்சியங்களென்றும் வாசிகசாலையைத் தற்காலிகமாக அமைத்ததே சங்கத்தின் முதற்சேவையென்றும் தமது பேச்சிற் குறிப்பிட்டார். சமூகத்துறையில் அச்சங்கம் வெற்றியுற இளைஞரின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு வேண்டுமெனவும் மேலும் குறிப்பிட்டார். சங்கத்தின் நோக்கம், அதற்கேற்ப இளைஞரின் ஒழுக்கம், ஒத்துழைப்பு என்பவற்றைத் தலைவர் தமது பேச்சிற் குறிப்பிட்டார். மு குணசிங்கம். க. கனகராசா இ. பசுபதி என்போராலுங் குறிப்புரைகள் கூறப்பட்டன. —கடிதம்


கிரந்தி, சரும வெடிப்புகள், படை, புண்கள், அழுகற் சிரங்கு, எச்சிற் தேமல், முதலிய
தோற்புரை வியாதிகளாற் பீடிக்கப்பட்டிருந்தால்
ஆயிரக்கணக்கான மக்கள்
'மோறெல்ஸ் எக்ஸிமா கியுயர்'
[மோறெல்ஸ், சோறி சிரங்கு மாற்றும் மருந்து]
உபயோகித்து குணமடைந்ததுபோல் நீங்களும் குணமடையலாம்.

'மோறெல்ஸ் எக்ஸிமா கியுயர்' (றிஜிஸ்ரேட்) நூற்றுக்கு நூறுவீதம் திருப்தியளிக்கிறது

ஒருதரம் உபயோகித்தால் திருப்தியடைவீர்கள்.

2 அவுன்ஸ் புட்டி ரூ. 3-25
(உபயோகிக்கும் விபரத்துடன்)
தபாற் செலவு சதம் 30

சில மாகாணங்களில் விநியோகஞ் செய்வோர் தேவை.
கழிவு விபரங்கட்கு எழுதவும்.

**Hector, Mather & Co.;**
(mec)
19–21, Grandpass Road
COLOMBO
[3594]


## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 4592**

வட்டுக்கோட்டை மேற்கு
ஆறுமுகம் நாராயணசாமி
வழக்காளி

வட்டுக்கோட்டை கிழக்கு,
1. அம்பலவாணர் மண்டலநாயகம்
2. விஞசித்தம்பி கதிரேசர்
எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 4592-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1949-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 12-ந் திகதி (12-2-49) சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:**—முதல் வட்டி ரூபாய் 1433-55-ம், இதில் ரூபாய் 1000-க்கு 22-6-48 திகதி தொடக்கம் 26-8-48 திகதி வரைக்கும் 100-க்கு 8 வீத வட்டியும், பின் திகதி தொடக்கம் முழுத் தொகைக்கும் இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 168-63 சதம்.

### காணியின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி வட்டுக்கோட்டைக் கோவிற்பற்று வட்டுக்கோட்டை கிழக்கிறை "பூன்சிர தோட்டம்" நிலைப்பரப்பு ஆறரை ($6\frac{1}{2}$-ம்) பனைகளும் செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கும் மேற்கும் ஒழுங்கை, வடக்கு, அம்பலவாணர் மண்டலநாயகத்திற்குரிய ஆதனம், தெற்கு, கதிரவேலு சபாரத்தினத்திற்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner & Licensed Auctioneer

தெல்லிப்பழை
3-1-1949. [3593]


## தோற்புரைகளுக்கு மருந்து

கொழும்பு கிரூன்பாஸ் வீதியிலுள்ள, ஹெக்டர் மேதர் கம்பெனியில் 'மோறெல்ஸ் எக்ஸிமா கியூவர்' என்ற மருந்து, சொறி தேமல் போன்ற வியாதிகளை விரைவிற் குணப்படுத்துகின்றதென அறியக்கிடக்கின்றது. விற்பனையாளர்களுக்குக் குறித்த வியாபார நிலையம் போதிய கழிவு கொடுக்கின்றது.



## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம் ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய வி[illegible]

S. [illegible]
சிரூப்பர்

[3575]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். மருமகன் லோ. ஜேம்ஸ் (மே. 206) ஒருவர் நினைத்த எண்ணை இன்னொருவர் சொல்வது எப்படி என்று எனக்கெழுதியிருக்கிறார். "இது ஒரு சாஸ்திரமா?" என்றும் கேட்டிருக்கிறார். மருமகன் சாஸ்திரத்தைச் சோதிடமென்று கருதினாரோ தெரியவில்லை. ஆனால் நினைத்த எண்ணைச் சொல்வது சாஸ்திரரீதியானதுதான். மருமக்களே பின்வரும் முறையின்படி செய்து பாருங்கள்.

"ஒருவர் ஒரு எண்ணை நினைத்துக்கொள்ளல் வேண்டும். அதை இரண்டாற் பெருக்கிப் பின்பு ஐந்தாற் பெருக்க வேண்டும். வரும் மொத்த எண்ணின் வலப்பக்கமிருக்கும் ஓர் எண்ணை நீக்கினால் மீதியாக இருக்கும் எண்ணே நினைத்த எண்ணாகும்" என்று எழுதியிருக்கிறார், மருமகன் லோ. ஜேம்ஸ்.

எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? என்ன ஆச்சரியம் என்று சிலர் நினைக்கவும் கூடும். இதில் ஆச்சரியப்படக்கூடியது ஒன்றும் இல்லையென்று நான் சொல்லுகிறேன். மாமாவை நம்புவீர்களா?

இதோ பாருங்கள், நினைத்த எண்ணைப் பத்தாற் பெருக்கி வரும் மொத்தத்தில் வலது பக்கத்து எண்ணை—அதாவது 0ஐ நீக்கிவிட்டால் வரும் எண், நீர் நினைத்த எண்தானே! மருமகன் லோ. ஜேம்ஸ் இதை யோசித்தாரா? வணக்கம்.

கேசரிமாமா

## மாமா பதில்

**ரா. ரகுநாதன்,** மே.114: நீர் அனுப்பிய பொங்கல் வாழ்த்துக் கிடைத்தது.

**த. வேலுப்பிள்ளை,** மே.157: உமது 'கார்ட்' கிடைத்தது. பதில் சீக்கிரத்தில் எழுதுவேன்.

**தி. பஞ்சாட்சரம்,** மே.95: நீர் இப்பொழுது என்ன செய்துகொண்டிருக்கிறீர் என்பதைத் தெரிவிக்கவும்.

**கா. வ. இராமச்சந்திரன்,** கீ.227: விடை, தபால் மூலம் அனுப்பியிருக்கிறேன்.

**க. ஈஸ்வரநாதபிள்ளை,** கீ.249: உம்மை என் மருமகனாக்கியிருக்கின்றேன். உமது தகப்பன் பெயர் யாது?

**ஐ. இராசேந்திரம்,** கீ.248: உம்மையும் என் மருமகனாக்கியிருக்கிறேன்.

**வீ. சண்முகம்,** மே.165: தொடர்கதை விஷயமாக நிபந்தனைகள் ஒன்றும் கொடுக்க முடியாமலிருக்கின்றது மருமகனே. உமது கட்டுரை கிடைத்தது

**வ. நீத்தம்மா,** கீ.246: உம்மை என் மருமகளாக்கியிருக்கிறேன்.

**இ. பேரின்பநாயகம்,** மே.222: நீர் அனுப்பிய கட்டுரைகளும் கவிதைகளும் கிடைத்தன.

**அல்வாய்த் தணிகாசலம்,** மே.9: நான் இப்போது நல்ல சுகமாயிருக்கிறேன். உமது சுகம் இப்போது எப்படி? பாட்டுக் கிடைத்தது. உமது புது விருந்தை எதிர்பார்க்கிறேன்.

**பா. பஞ்சநதம்,** மே.247: உம்மை என் மருமகனுக்கியிருக்கிறேன். தந்தையின் பெயரை எழுதியனுப்பும்.

**சு. காந்திமதி,** மே.145: உமது கட்டுரைகள் கிடைத்தன. உம்முடைய கதையைப் பற்றிய பிரச்சினையை அதோடு விட்டுவிட்டால் நலம்.

**ஆ. கணபதிப்பிள்ளை,** மே.12: உமது கட்டுரை கிடைத்தது. நன்றாயிருக்கிறது.

**சு. கார்த்திகேயன்,** கீ.144: உமது கட்டுரை இம்முறை பிரசுரமாகிறது.

**சு. கௌரி,** கீ.146: உமது சிறு கட்டுரை கிடைத்தது. இன்னும் நன்றாக எழுதப் பழகவேண்டும்.

**லோ. ஜேம்ஸ்,** கீ.216: உமக்குப் பதில் தபால்மூலம் அனுப்பியிருக்கிறேன்.

### பதில்

1. வடக்கு
2. வெண்கல மாளிகை.
3. 20 ரூபாய்க்கும், அதற்கு மேற்பட்ட தொகைக்கும். 6 சதம்.
4. அருணகிரிநாதர்.
5. ஒருதுளி நீரைப் பூமி அளவு பெருப்பித்து, அதோடு அணுவை ஒப்பிடின், அணு ஒரு துப்பாக்கிச் சன்னமளவு இருக்கும்.

## தைப்பொங்கல்?

**'அல்வாய்த் தணிகாசலம்' மே.9.**

தின்று தெத்துப் பொங்கி மகிழத்
தினமொன் றெம்முன் வந்தாலும்
கன்று போல காங்கள் துள்ளிக்
களிக்க நேரந் தந்தாலும்
சென்ற பொங்க விருந்து சேவை
செய்த காந்தி சென்றதினால்
இன்று வாழும் இளைஞர் எமக்(கு)
இன்ப மென்ப தில்லையே!

## தெரிந்ததா?

1. எத்திசையாகத் தலை வைத்து உறங்குதல் கூடாது?
2. அட்ட கைமுழுவாற் கட்டப்பட்ட பெரிய மடத்துக்குப் பெயர் யாது?
3. எத்தனை ரூபாய்க்கு மேற்பட்ட பற்றுச்சீட்டுக்கு முத்திரை ஒட்ட வேண்டும்.? எவ்வளவு?
4. திருப்புகழ் செய்தவரின் பெயர் யாது?
5. அணுவின் பருமை என்ன?

### பிறந்ததின வாழ்த்துக்கள்

**16-1-49 — 29-1-49**

**மே.15. யோ. சின்னத்துரை; கீ.36. கு. விஸ்வேஸ்வரன்; மே.94. மு. மகாதேவா; மே.99. மு. கருணநந்தன்; கீ.151, சு. சண்முகநாதன்: கீ.173. அ. சாமுவேல்; கீ.201. அ. பாலசரஸ்வதி; மே.234. ஸ்ரீபெயிர்.**

மேற்குறித்த எனது மருமக்கள் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக.

## நான் கண்ட கனவு

**சு. கார்த்திகேயன் கீ.144**

ஒரு நாள் கூட்டத்திலிருந்து வீடுதிரும்ப இரவு 9 மணியாகிவிட்டது. வந்த களைப்பில் படுத்துறங்கிவிட்டேன். நானும் என் சிநேகிதன் ரவீந்திரனும் கடற்கரையிலிருந்து காட்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தோம். நாங்களிருவரும் பல விஷயங்களைப் பேசிக் கடைசியில் ஆங்கிலப் படிப்போ தமிழ்ப் படிப்போ நல்லது என்று விவாதித்துக் கொண்டிருக்கும் பொழுது எங்கிருந்தோ ஒரு யானைவந்து ரவியைத் தூக்கிக் கடலில் எறிந்துவிட்டது. நான் ஐயோ "ரவி" "ரவி" என்று ஓலமிட்டேன். அப்பொழுது என் முதுகிலும் இரண்டு அடி விழுந்தது. நான் கண்களைக் கசக்கிக் கொண்டு எழுந்தேன். அப்பொழுதுதான் நான் கண்டது கனவு என்று தெரிந்தது. என் முதுகில் அடித்தது யாரென்று நினைக்கிறீர்கள்? ஐயையோ யானையென்று தானே? அது தானில்லை. எனது அம்மா நான் அலறின சப்தத்தைக் கேட்டு என்னை எழுப்பிக் கொண்டிருந்தாள். நான் கண்ட கனவை அம்மாவிற்குச் சொல்லிக்கொண்டு முகங்கழுவச் [illegible]

தொடர்கதை

## நடராஜன் வெற்றி

**ஆ. கணபதிப்பிள்ளை மே.12**

[9-1-49-ன் தொடர்ச்சி]

பொழுதும் புலர்ந்தது. "டேய் இன்னும் நித்திரையா. நாளைக்குத் தீபாவலியல்லவா? ஓடு. நேற்றுக் காட்டிய பூசினிக்காயை எடுத்துக்கொண்டு போய்ச் சந்தையில் விற்றுவிட்டு, இறைச்சிச் சரக்கு, மிளகாய், எலுமிச்சம்பழம் எல்லாம் வாங்கிவா. பின்னேரமானதும் சாவலைப்பிடித்து மூடி வை. என்னடா நிற்கின்றாய்? ஓடு இந்தா பத்துச் சதம் பாண் வாங்கித்தின்," என்று நடராசனிடம் காசையும் கொடுத்தனுப்பினார் தகப்பனார்.

காசை வாங்கி மடியில் வைத்துக்கொண்டு வயலை நோக்கி நடந்தான். இவன் போகும் வழியில் இவன் நண்பன் பாலு சந்தித்து "ஏண்டா! பின்னேரம் கூட்டம் அல்லவா?" என்றான். "மறந்துவிட்டேனே. சரி நான் வாறேன் பின்பு," என்று சொல்லிவிட்டு மெள்ள நடையைக்கட்டினான். ஆனால் நடராசனின் மனதிற்குள் இருப்பதை மற்றவர்கள் அறிவார்களா?

"நாளை தீபாவலி. எனக்கு அந்த வேட்டி வேண்டாம். 'ஷோட்'கை பெனியன் வேண்டும். பட்டாசு வேண்டும்," என்று கத்தும் பச்சிளம் பாலகர் ஒருபக்கம். "இப்போதானே சேலைகள் மலிவு எனக்கு 50 ரூபாவிற்கு ஓர் சேலை வாங்கித்தா," என்று கணவரை வாட்டும் மனைவியர் ஒருபக்கம். "உத்தமர் காந்தி இறந்த ஆண்டில் தீபாவலி கொண்டாடக் கூடாது," என்று கதறுவோர் ஒருபக்கம்; "நாளைக்கு எத்தனை போத்தல் குடிக்கவேண்டும்," என்றுஎண்ணமிடுவோர் பலர். "அடுத்த அமாவாசை விரதம் பிடிக்கலாம் இம்முறை ஓர் பத்துரூபாவிற்கு ஆட்டிறைச்சி வாங்கித் தின்போம்," என்போர் சிலர். இம்மாதிரியாபக பலசாரரும் நாளை வரும் காரியத்தை யோசித்துக்கொண்டே இருக்கின்றனர். இவர்களைப்போற்றான் ஸ்ரீமான் நடராசனும், நாளை தீபாவலிக்கு என்ன இருந்தும் எனது தந்தையைக் குடிக்க விடக்கூடாது என்ற திடமான மனதுடன் சந்தையால் வந்தான்.

"எல்லாம் வாங்கிவந்தாயா?" என்ற தந்தையின் வினவிற்கு "ஆம்" என்று சொல்லிவிட்டுக் கிணற்றடிக்குப் போய் கால் முகம் அலம்பிவிட்டு வந்து சாப்பிட்டான். சாப்பிடும்பொழுது நடராசனின் தாய் "வேலுப்பிள்ளை உன்னைச் சாப்பிட்டதும் வரச் சொல்லும்படி சொன்னான்" என்றாள். சாப்பிட்டுக் கையலம்பியதும் மெல்ல மெல்ல வேலுப்பிள்ளையின் வீட்டிற்குச் சென்றான். "ஏன்? இன்று கூட்டமல்லவா? நான் ஓர் பிரேரணை கொண்டுவரப் போகின்றேன்" என்றான் வேலுப்பிள்ளை. "என்ன பிரேரணை நான் அறியலாமா?" என்று கேட்டான் நடராசன். "நீயறியாமல் வேறு யார் அறிவது? கூட்டத்திற்கு நேரமாகின்றது. வா பேசிக்கொண்டே போவோம்" என்று வேலுப்பிள்ளை அழைக்க நடராசனும் உடன்பட்டான்.

வழியில் வேலுப்பிள்ளையே பேச்சைத் தொடங்கினான். "நாம் செய்யவேண்டிய காரியங்கள் அனேகம் உள. அவற்றுள் இம்முறை முதற் செய்யவேண்டிய காரியம் எமது சங்கத்தில் இருப்பவர்கள் எல்லோரும் தங்கள் தங்கள் தந்தையரை நாளைய தீபாவலிக்கு மது அருந்தாமற் செய்யவேண்டும்.

அடுத்தபடியாக அங்கத்தவர் வீடுகளில் இப்பண்டிகையையிட்டு மாமிசம் சமைக்கப்படாது. இப்படி நாம் இவ்வருடம் நம் வீட்டில் செய்தால், பின்பு சில காலத்தில் நாட்டில் மது அருந்துவதே நின்றுவிடும். உனது விருப்பம் என்ன?

"எனக்கும் அது சரிபோற்றான் தோன்றுகிறது."

"அப்படியானால் இன்றே இதை ஓர் பிரேரணையாகக் கொண்டுவரட்டுமா?"

"ஆம்."

"அப்படியானால் நீர்தான் இப் பிரேரணையை அனுமதிக்கவேண்டும்."

"ஆ! தாராளமாக!"

"ஆனால் உனது தந்தையை நிறுததுவது எப்படி?"

"நீயேன் அதைப்பற்றி யோசிக்கின்றாய். அது என் பொறுப்பு."

கூட்டமும் நடந்து வேலுப்பிள்ளையின் பிரேரணை அனுமதிக்கப்பட்டதென்று சொல்லவும் வேண்டுமா?

(தொடரும்)

### மருமக்கள்

கீ.246, வரப்பிரகாசம் நீத்தம்மா, கந்தரோடை வீதி, சுன்னாகம்; மே.247, பா. பஞ்சநதம், மெயின் வீதி, பருத்தித்துறை; கீ.248. ஐயாமுத்து இராசேந்திரம், முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்; கீ. 249. க. ஈஸ்வரநாதபிள்ளை c/o வை. கந்தையா, நாரந்தனை வடக்கு, ஊர்காவற்றுறை. மே.245. அ. ஜோ. ஜெயராஜா, c/o. செ. ப. அருள்நாயகம், 18, முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

### ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்:.................................................

விலாசம்:.................................................

.................................................


.................................................

பிறந்த திகதி:..........................

.................................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொங்கற் புதுமலர்

திருச்சி வானொலி நிலையத்தினர் இவ்வாண்டும் தமிழ் மக்களுக்கு மணங்கமழும் பொங்கற் புதுமலரை வழங்கினர். தைப்பொங்கல் தினத்தன்று பலரும் அனுபவித்த திருச்சி வானொலி நிகழ்ச்சிகளையே இங்கு குறிப்பிடுகின்றேன். "எனக்கும் இந்தக் காலத்துச் சம்பிரதாயத்துக்கும் வெகுதூரம்" என்று ஆரம்பித்த **புது வாழ்வு** என்ற நாடகம் இக் காலத்திலே தண்ணீரே பாலாகிக்கொள்ளும் விந்தையையும் பாகசியப்படுத்தியது. அந்தக்காலத்திலே பெருவாழ்வு வாழ்ந்தோம்; பெருமையாக இருந்தோம் என்று பெருமைபடித்த அப்பெரியார், இக்காலத்தில் வெங்கலப்பானையிற் பொங்கினாலும் வைத்தியர்களுக்குப் பணம் இறுக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் எடுத்துக்காட்டி அக்காலத்து மண்பானைப் பொங்கலின் மகத்துவத்தையும் சுவைபடக் கூறினார். இன்று சுதந்திரம் இடைத்திருப்பது உண்மைதான். ஆனால் ஒவ்வொருவரும் பொறுப்பை உணர்ந்தாற்றான் **புது வாழ்வு** நிறைவு பெறும் என்ற உண்மையையும் நாம் அறிந்தோம்.

## ஒலிச் சித்திரம்

திருச்சி வானொலி நிலையத்தாரின் **ஒலிச் சித்திரம்** என்றுமே தனிச் சிறப்பு வாய்ந்தது. இதற்காக நிலையத்து வாத்தியக் கோஷ்டியினரை எவ்வளவுக்கும் பாராட்டலாம். **கோவலன்** சரித்திரம் ஒலிச் சித்திரமாக அமைந்தபோது வெவ்வேறு வாத்தியங்களே பாத்திரங்களாக நடித்தன! 'நல்வாக்கு நீ கொடடி' என்ற இசையை அனுபவித்தபோது கோவலனே மறைவில் நின்று இசைப்பது போன்றிருந்தது. அவ்வளவு நுணுக்கமாக ஒலிச் சித்திரம் கையாளப்பட்டிருந்தது.

## கரும்பும் கதிரும்

'கதிர்கண்டு களிகொண்டோமே' என்று கருப்பாயியும் அவளுடைய மச்சானும் பாடிக்கொண்டு, கதிர் கண்டு தலை குனிந்த கதையை நாணத்துடனும் இன்னிசையுடன் சொன்ன அழகே அழகு. இது இசை நாடகமாகும். வறுமைப் பிணிக்கு மருந்து விவசாயப் பெருக்கம் என்பதே கரும்பாயி தம்பதிகளின் படிப்பனையாக இருந்தது.

## பொங்கற் பொட்டலம்

சிறுவருக்கான பொங்கற் பொட்டலத்திற் பண்டாரமும், குடுகுடுப்பாண்டியும், பூசாரியும், தவளைகளின் 'பக்காலபாத' சம்பாஷணையும் நன்றாக விருந்தபோதிலும் அந் நிகழ்ச்சி சிறிது நீண்டுவிட்டது. சிறுவர்களுக்கு இது ஒரு விருந்தாக அமைந்திருக்கக்கூடும்.

## காட்சி வரிசை

பெண் உலக நிகழ்ச்சியின் கோஷ்டி கான்மும், தைத் திருநாளின் காட்சிவரிசையும் குறிப்பிடத் தக்கன. மன நிறைவே வாழ்க்கையின் இலட்சியமென்பதையும், இன்பமும் துன்பமும் கலந்ததே வாழ்க்கையென்ற நியதியையும் இந் நிகழ்ச்சி அறிவுறுத்தி வைத்தது.

## கவி அரங்கம்

பொங்கற் புதுமலரின் முக்கிய அம்சம் **கவி அரங்கம்** என்று கூறினும் தகும். **திருச்சி வானொலி** நிலையத்தார் இதைத் திறம்பட ஏற்படுத்தி வருகின்றனர். **செல்வம்** என்ற பொருளை எடுத்துக்கொண்டு, எட்டுக் கவிஞர்கள் இயற்கைச் செல்வம், மேழிச்செல்வம், தொழிற்செல்வம், பொருட்செல்வம், கல்விச்செல்வம், கலைச்செல்வம், ஞானச்செல்வம், அன்புச்செல்வம் என்ற எட்டுச் செல்வங்களைப்பற்றிக் கவிதைகள் புனைந்தனர்.

இலக்கியப் பண்பாடு கைவரப்பெற்ற காரைக்குடி சா. கணேசன் அவர்கள், அன்றைய கவி அரங்கினுக்குத் தலைமை தாங்கினார்கள்.

பேராசிரியர் ஏ. முத்துசிவன் இயற்கைச் செல்வத்தின் பல இன்பங்களைப் பாடியபோது 'மலைமீது பண்படி வழிந்தூருளு'வது போலவேயிருந்தது.

'ஆயிரம் ஆயிரம் காணி நிலம் தரிசாகுதே, நாம் அறிவைப்பெற்றும் பசிக்குணவாகாது வீணாகுதே' என மாதமணி ஆசிரியர் ஸ்ரீ அருணாசலம் அவர்கள் மேழிச் செல்வத்தைப்பற்றிப் பாடியபோது அருமையான பல உண்மைகளைக் காட்டிச் சென்றார்.

'தோட்டத்திலே விளைந்த பருத்தி துள்ளி வந்ததோ' என்று ஸ்ரீ பி. சி. தம்பி அவர்கள் தொழிற் செல்வத்தைப் பற்றி இசைத்தபோது எங்கள் உள்ளங்களே துள்ளிக் குதித்தோடிச் சென்று, வானொலியின் சிறு வாயைச் சுற்றிக்கொண்டன.

பொருள் என்ற பெயர் கொண்ட
ஒருசெல்வம் உண்டு
புவியெங்கும் பலவாறு
அவர்செய்யும் தொண்டு

என ஆரம்பித்து, நாமக்கல் கவிஞரின் புதல்வன் ஸ்ரீ ரா. பாலசுப்பிரமணியம் அவர்கள், பொருட் செல்வத்தின் பல அம்சங்களையும் எடுத்தோதினார்.

உலகை அழிப்பதே உத்தமக் கல்வியென இக்காலத்திற் பலரும் நினைத்திடுவார்கள். ஆனாற் கல்விச் செல்வம் பற்றிய பாடல்களை யாத்த அறிஞர் ஸ்ரீ துரைசாமி அவர்கள் அத்தகைய கல்வி [illegible] னற்றதென்பதைப் பொங்கும் தமிழ்மறை தந்த வள்ளுவனின் ஞானத்தைக்கொண்டும், மங்காத தீஞ்சுவைத் தேனை வடித்திட்ட கம்பனின் கவியமுதத்தினைக்கொண்டும், பயனுள்ள கல்வியின் மாண்பை அப்படியே வடித்தெடுத்து வாரி வழங்கினார். இதை யனுபவித்துக்கொண்டிருந்த தலைவர் கணேசன் அவர்கள் 'உண்மை; உண்மை!!' என்று உற்சாகத்துடன் ஆர்ப்பரித்துள்ளார். கவிஞர் துரைசாமி அவர்களின் கவிதைகள் நல்ல கற்பனைகளுடன் செறிந்திருந்தன. 'ஞானத்து நாயகன் கைப்பிடிக்க' என்று ஓரிடத்தில் அவர் இழைத்த கற்பனை நன்றாக இருந்தது.

'யாழுக்கு ஒலிபோல, யாவர்க்கும் கலை வேண்டும்' என்பதே 'மகி' என்ற ஸ்ரீ குருசாமி அவர்களது பாடலின் உள்ளீடாக இருந்தது. காணாத கடவுளுக்குக் கல் தந்த காவியனைப் பற்றியும், ஏனைய கலைஞர்களைப்பற்றியும் அவர் உணர்ச்சியுடன் பாடினார். கலைச் செல்வம் என்பதே அவர் எடுத்துக்கொண்ட பொருளாகும்.

அருமையான விமர்சகரான ஸ்ரீ ராம சடகோபன் 'புவியில் இனிய தமிழ்மொழியால்' ஞானச் செல்வத்தை அள்ளி இறைத்தார். அறிவே தெய்வம்; அதுவே சக்தி; அறிவும் அன்பும் உறவாகும்; ஆணும் பெண்ணும் அதுவாகும்; என்றுபாடிய அக் கவிஞர்:

"அறிவுக்குடும்பம் ஒன்றானல்
அகிலக் குடும்பம் ஒன்றாகும்"

என்ற ஓரே உலக கோட்பாட்டை அழகாக விளக்கினார்.

மனத்தில் மலரும் நெகிழ்ச்சியே அன்பு என்பதைப் பசுமரத்தாணிபோற் பதியச் செய்தார், ஸ்ரீராய சொக்கலிங்கம். காந்திஜின் அன்பு வாழ்க்கையையும் தியாக வாழ்க்கையையும் அவர் அன்புச் செல்வத்திற் பின்னியிருந்தார்.

இக்கவிஞர்கள் அனைவரின் பாடல்களிலும் உள்ளத்தைத் தொடும் இடங்கள் பல அமைந்திருந்தன. கலைவர் அவர்களே அவற்றை வியந்திருந்தார். அன்னாரின் நன்றிச் செல்வத்துடன பொங்கலன்று பூத்த புதுநகை எங்கும் தங்குவதாயிற்று.

—அரியரத்தினம்

## இசை அரங்கு

யாழ்ப்பாணம், உடுவில் இசைத் தமிழ் நிலையத்தின் 5-வது இலவச இசையரங்கு 16-1-1949 ஞாயிற்றுக்கிழமை மாலை 7 மணியளவில் மேற்படி நிலையத்தாரின் இசையரங்கு தொடங்கி மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. பெருந்திரளான பெண்மணிகளும் ஆடவர்களும் குழந்தைகளும் குழுமியிருந்து நிகழ்ச்சிகளை நன்கு அனுபவித்தனர். ஆரம்பத்தில் வண்ணை ஸ்ரீ மணி ஐயர் அவர்கள் "பக்த புனிதவதி" என்னும் சரிதையைப் பக்க வாத்திய சகிதமாகக் கதாப்பிரசங்கம் செய்தார்.

பேபி சரோஜா—கணேசன் (ஸ்ரீ மணிஐயருடைய மாணவர்கள்) செய்த நடனங்கள் சபையோரை மிகவும் உற்சாகப்படுத்தியது. அவர்களுடைய சிவசக்தி நடனத்தையும் அதன் ஒழுங்கையும் [illegible] னத்திற்கும் பக்கவாத்தியம் வாசித்தவர்கள் நடனம் செய்தவர்களுடைய சகோதரர்களே.

நிலைய அதிபர் திரு. சண்முகரத்தினம் அவர்கள் சபையோருக்கும் நிலைய ஆதரவாளர்களுக்கும் நிகழ்ச்சிகளிற் பங்குபற்றிய எல்லோருக்கும் நன்றி தெரிவித்தபின், ஸ்ரீ T. பாலச்சந்திரன் D. R. O. அவர்கள் சில வார்த்தைகள் பேசும்போது பிரதானமாக நமதுநாட்டில் இசைத் தமிழை வளர்க்க எல்லோரும் முன்வர வேண்டுமென்றும் பல இசை நிலையங்கள் சேர்ந்து தொண்டாற்ற வேண்டு மென்றும் சங்கீதவித்வான்களுடைய ஒத்துழைப்பு வேண்டு மென்றுங் குறிப்பிட்டார்.

—நிருபர்

டொக்டர் கெனடி சொற்பொழிவுகள்
பின்போடப்பட்டன

யாழ்ப்பாணம் கிறிஸ்த வாலிபர் சங்கத்தின் ஆதரவில் 21-1-49 தொடக்கமாக யாழ்ப்பாணம்-சுண்டிக்குளியிலும், மருதனமடத்திலும் நடைபெற விருந்த டொக்டர் எம். ரீ. கெனடி அவர்களின் 'டற்ரு' ஞாபகார்த்தச் சொற்பொழிவுகள் தவிர்க்கமுடியாத காரணமாகப் பின்போடப்பட்டுள்ளன. சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படும் காலம் பின்னர் தெரிவிக்கப்படும்.

நிர்வாக சபையினர்
யாழ்ப்பாணம்
20-1-49 [3592]

## சதுரங்கம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ன்றனர். ஆகவே அங்கு குடியேறியபொழுதே புத்த சமயத்தார் இந்த வித்தையையும் கொண்டு சென்றிருக்கலாம். கி. மு. நான்கு அல்லது மூன்றாவது நூற்றாண்டு முதற்கொண்டாவது இந்த ஆட்டம் அங்கு ஆடப்பட்டு வருகின்றது எனக் கொள்ளலாம். கைத்தொழில்களுக்கு வசதியில்லாத அந்தப் பிரதேசத்தில் உள்ள ஜனங்கள் குளிரின்கொடுமையால் வருஷத்திற் பெரும்பாகத்தை வீணாய்க் கழித்துவரவேண்டியிருப்பதால் அவர்கள் இந்த ஆட்டத்தில் அதி ருசியுள்ளவர்கள் போலும்!

ஷேக்ஸ்பியர் மஹாகவியின் நாடகங்களைப் பரிசோதித்துப் பதித்துப் புகழுடன் விளங்கிய ஸ்டாண்டன் (Staunton 1810—1874) என்னும் வித்துவான் தாம் எழுதிய **சதுரங்க சாரம்** (The Chess Handbook) என்னும் நூலில் "மனிதாது புத்தி சாதுரியத்தை விருத்தி செய்யக்கூடிய 'செஸ்' என்னும் இந்த ஆட்டத்தை ஒவ்வொருவரும் 16 காய்களைக்கொண்டு 64 சதுரங்களில் இருவர் ஆடுவார்கள். இது கிறிஸ்துவுக்குப் பல நூற்றாண்டுகளுக்குமுன் இந்தியாவில் உதித்தது. அராபியர்களால் கி. பி. எட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பாவுக்குக் கொண்டுசெல்லப்பட்டது என முடிவு கட்டியுள்ளார்.

* * *

உயிர்ப்பலிக்கு இடமில்லாத இந்தச் சதுரங்க ஆட்டமானது பாரதநாட்டால் உலகுக்கு உவந்தளிக்கப்பட்ட தொன்றாகும்.

## வேண்டாத ஆராய்வு

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இளங்கோவடிகள் கோவலனையோ கண்ணகியையோ அவ்வாறு பணிந்திலர்.

'இனி, பண்டிதர் கண்ணகியை ஆண்மாரியெனவும் கண்ணகியோடு ஒரு தமிழ்ப் பெண்ணை ஒப்பிடின் அவள் நெருப்பெடுப்பாள் என்றுங் கூறியன சிறிதும் மறுக்கப்படவில்லை' யென்பது.

இப்பகுதிக்கு விடை 'விபரீத விவாதக்கட்டுரையாளர்க்குவிடை' என்ற கட்டுரைக்கண் விரிவாக விளக்கப்பட்டது. ஸ்ரீ வெற்றிவேற்பிள்ளையும் வித்துவானும் புலமைநலங்காண்போர் ஒப்பும் வகையில் முன்னமே மறுத்திருக்கிறார்கள். நண்பர் எந்தவகையான முடிபுகளைக் கண்டுந் திருப்தியுற மாட்டாரென்பது சிறிதுசிறிதாக விளங்குகின்றது. எந்தவிதமான மறுப்புரையைப் படித்த பின்னும் 'சிறிதும் மறுக்கப்படவில்லை' என்னும் வார்த்தைகளைப் பிரயோகித்து விவாதத்தை முடிக்கக் கருதுவது தவறு. அவர் முடிப்பதாகக் கருதும்போது தான் அதிஷ்டவசமாக விவாதம் நீளவேண்டிய வகையில் அவருடைய வாக்கியப் பிரயோகம் நிகழ்ந்துவிடுகிறது.

'பாரதியார் நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம் என்று கூறியமையால் அவர் அமரகவியாகிவிட முடியாது.' என்பது.

இப்பகுதியை அறிஞர்கள் கூர்ந்து கவனிக்கவேண்டும். தாம் எழுதும் விஷயங்களை ஒருவரும் படிக்கமாட்டார்களென்றோ அல்லது படித்தாலும் வெளியிற் பேசமாட்டார்களென்றோ எண்ணித்தான் நண்பர் இவ்விதங் கூறியிருக்கவேண்டுமென்பது எமது கருத்து. யாராவது பாரதியார் நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம் என்று கூறியமையால் அமரகவியாகிவிட்டார் என்று கூறினார்களா? சிலப்பதிகாரத்தைக் குப்பைக் கூடையில் இடச்சொல்லுவதனாற் காரியம் முடிந்துவிடும் என்ற எண்ணுபவர் சிலர் நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம் என்றமையால்தான் பாரதியார் அமரகவியாகப் போற்றப்படுகின்றார் என்று கனவு கண்டிருக்கக்கூடும். இல்லையேல் இவ்வித வார்த்தையாடலின் பொருள் என்னை? 'பெயக்கண்டு நஞ்சுண்டமைவர்' தமிழ் நாட்டவரென்னுந் துணிபாலிது. எதிர்க் கட்சியினரின் வார்த்தைகளைத் தாம் மறுப்பெழுதக்கூடியவிதத்திலே திருப்பிவைத்து மறுப்பெழுதும் விந்தையை இதற்குமுன் யாங் கேள்விப்பட்டும் அறியேம். என்னே புதுமாபு. பாரதியார் நெஞ்சையள்ளுஞ் சிலப்பதிகாரம் என்று கூறியதால்அமரகவியாகாரயினார் என்ற தங் கொள்கையை மனதில் வைத்துக்கொண்டு எதிர்க்கட்சியினரின் கொள்கை அதற்கு முரண்பட்டதுதானேயென ஊகஞ் செய்து முடிபு கண்ட நண்பர் அவர்களின் முடிபுகள் பொருந்துமா என்பதை அறிஞர்களே சிந்திக்க விட்டுவிடுகிறேன்.

இனி, மறுப்புரை யெழுதும் அன்பர்கள் தாம் மறுக்க விரும்பும் விஷயத்தைத் தங் கூற்றால் திரித்துக் கூறாமல் உள்ளதை உள்ளபடி அநுவாதக் குறியிட்டு உரைத்துவிட்டு மேல் மறுப்பை எழுதுவார்களாக. அடுத்த கட்டுரையில் முதல், கரு, உரிப் பொருள்கள் பற்றி நண்பர் எழுதிய 'இலக்கிய வரையறையில் இயையாப் பொருள் முடிவு' என்னும் கட்டுரை ஆராயப்படும்.

## காலிநகர்ச் சிவன்கோயில்

காலி இந்து மகாசபையின் நன் முயற்சியால் காலிநகர்ச் சிவன்கோயில் திருக்கோபுரத்தில் பெரும்பொருட்செலவில் புதிதாக அமைக்கப்பட்ட சிறந்த மின்சாரதீபம் சென்ற மார்கழிமாதத் திருவாதிரையன்று முதன்முறை ஏற்றப்படலாயிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ப் பலி

—சொக்கன்—

**தொடர் கதை**

[9-1-49 இதழின் தொடர்ச்சி]

## 3

நாகராசன் எந்தவிதமாகப் பார்த்தாலும் ஒரு பெண்ணின் மனத்தைக் கவருமளவுக்குத் தகுதி பெற்றவராகவேயிருந்தார். இது என் அபிப்பிராயம மட்டுமல்ல. ஆசிரியகலாசாலையில் நான்பழகிய சினேகிதிகள் யாவருக்கும் ஒப்பமுடிந்த ஒன்று.

நாகராசனுக்கு அழகு கூட இருந்ததா? கவர்ச்சி கூட இருந்ததா? என்று என்னால் ஒன்றுமே நிர்ணயிக்க முடியவில்லை. ஆனால் அவர் கண்கள் மட்டும மிகமிக அழகானவை; ஆழமானவை; அறிவைப் பிரதிபலிப்பவை; கவர்ச்சி வாய்ந்தவை.

எந்தநேரத்திலும் புத்தகமும் கையுமாகவே அவர் காட்சியளிப்பார்; ஆனால் புத்தகப் பூச்சியல்ல: பொது இயல் அறிவில் எங்கள் கலாசாலையிலேயே முதல்வர் அவர்தான். பலபத்திரிகைகளில் அவருடைய கதைகளும் கட்டுரைகளும் வெளியாகியிருக்கின்றன. வகுப்புப் பாடங்களிலும் முதல் ஐவருள் அவரும் ஒருவர்; சாதுரியமாகப்பேசுவார். அவர் பேசினால் இன்று முழுவதும் கேட்டுக்கொண்டிருக்கலாம். மாணவர் கழகத்தில் என்றைக்குமே அவருக்குத் தனிமதிப்பு. மகா கிண்டற் பேர்வழி; அவர் கிண்டல்கள் சிலேடையாகவும். அர்த்தம் பொதிந்தனவாயும், எதிராளியை ஈ விரக்கமின்றித் தாக்குவனவாயும் இருக்கும்.

ஆம்! அவருடைய உருவம், அறிவு, சாதுரியம் யாவும் என்னைக் கவரத்தான் செய்தன; நான் அவரை விரும்பினேன்; காதலித்தேன்.

ஆனால்; ...

காதலில் அவரை என் பங்காளியாக நான் கருதவில்லை. என்பின்னால் வேண்டுதலையும் பணிவையும் மேற்கொண்டு அவர் தொடர்ந்து வருவதைக் காண்பதில்தான் எனக்குச் சந்தோஷம்! கெர்வத்தின் உச்சாணிப் படிகளில் ஏறி நின்று கொண்டு அவர் என்னை நோக்கி ஒவ்வொரு படியாக ஊர்ந்துவருவதை என்கண்கள் பெருமையுடன் பார்த்துக் கொண்டிருந்தன.

கலாசாலையிற் பாடநேரங்களில் அவர் காதல் பொங்கும் விழிகளுடன் என்னை நோக்குவார்! அப்பொழுது என் உள்ளம் கெர்வ அலைகளில் மிதக்கும்! ஆனந்தமான ஒரு உணர்ச்சி என்னை ஆட்கொள்ளும். ஆனாலும் நான் அவர் பார்ப்பதை விரும்பாதவள் போன்று என் முகத்தைக் கடுகடுப்பாய் வைத்துக் கொள்ளுவேன். அலட்சியமாக என் முகத்தைத திருப்பிக்கொள்வேன். கடைக்கண்கள் மட்டும் அவர் பார்க்கிறாரா என்று ஆராயும். இவை எவ்வளவு கஷ்ட சாத்தியமான விஷயங்கள்!

## 4

நான் அப்பொழுது எங்கள் மாணவர் கழகத்தின் காரியதரிசியாக விருந்தேன். யாருக்குமே கிடையாத ஓர் உன்னத பதவி எனக்குக் கிடைத்து விட்டதாக எண்ணம்! காரணமும் இல்லாமல் இல்லை. அதுநாள்வரை மாணவர்களே தலைவர். காரியதரிசி போன்ற பதவிகளையும் மாணவிகள் உப பதவிகளையும் வகித்து வந்தார்கள்.

எங்கள் ஆசிரிய கலாசாலையில் முதல் பெண் காரியதரிசி நான்! என் தலை நிமிர்ந்தது; கெர்வம் எல்லை கடந்தது. இந்த மனப்பான்மை எனது செய்கைகளிலும் வெளியாகி இருக்கவேண்டும்.

இதன் பலன் எங்கள் மாதாந்த மலர் வெளியானபோது கைமேற் கிட்டியது. நான் இத்தகைய தாக்குதல் அதுவும் நாகராசனிடமிருந்து கிடைக்குமென்று எதிர்பார்க்கவேயில்லை. அவர் 'சங்கப் பலகை' என்ற தலைப்புடன் ஓர் விஷயம் எழுதி யிருந்தார்.

அக்காலத்தில மதுரையிலிருந்த சங்கப்பலகை நக்கீரர் போன்ற பெரும் புலவர்களுக்கே தன்னகத்தில் இடங்கொடுத்தது. இன்று எங்கள் மாணவர் கழகமாகிய சங்கப் பலகை யாருக்கு இடம் கொடுத்திருக்கிறது? தகுதியுள்ளவர்க்கா? தகுதி யற்றவர்க்கா? இதை வாசிக்கும் வாசகர்களே தீர்ப்புக் கூற வேண்டும் என்ற முன்னுரையுடன் தொடங்கி உத்தியோகஸ்தர் ஒவ்வொருவரைப் பற்றியும் அபிப்பிராயம் கூறி வந்த அவர் காரியதரிசியைப் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

'ஏனைய உத்தியோகஸ்தரிலும் திறமை வாய்ந்தவர்! அவருடைய கொள்கையும் அதற்கு மாறுற்றதல்ல'

என்னுடைய தற் பெருமைக்கு இது ஓர் சாட்டையடியல்லவா?

எனக்குக் கோபம் கோபமாய் வந்தது. என் சினேகிதிகள் அந்த விஷயத்தை எடுத்து வாசித்து என் தற்பெருமையை குத்திக்காட்டியபோது என்னாற் கோபத்தை அடக்கமுடியவில்லை. எல்லோர் மீதும் சீறிவிழுந்தேன்.

வேறு யாராவது இப்படி எழுதியிருந்தால் அதை ஓரளவு பொறுத்திருப்பேன். ஆனால் என் அன்புக்குரியவரே என்குறைகளை எடுத்துப் பகிரங்கப்படுத்தினால்!! அதை என்னாற் சகிக்கவே முடியாது.

நான் இச் சமயத்தில் ஒன்றைமட்டும் யோசிக்கவில்லை: என்னுடைய அலட்சியத்திலும் அவருடைய கிண்டல் கட்டுரை பெரிதல்ல என்பதுதான் அது; ஏன்? நான் கெர்வியல்லவா?

நான் எதிர்பார்த்தபடி அவரை அன்று பின்னேரம் தனிமையிற் சந்தித்தேன். என்முகம் சிவந்துபோயிற்று. கோபத்தாலா? வெட்கத்தாலா? இரண்டாலுந்தான். ஆனால் வெட்கந்தான் அதிகமாக என்முகத்தைச் சிவக்கச் செய்தது என்பதை நான் மறைத்துவிட முடியாது?

"அந்தக் கட்டுரையை எழுதியதால் ஏதாவது லாபம் கிடைத்ததா? என்னை அவமானப்படுத்தியதால் என்ன பலனைக் கண்டீர்கள்" என்று அவரைக் கேட்டேன்.

அவர் சிரித்து அந்த விஷயத்தை மழுப்பிவிட முயன்றார். நான் விடவில்லை! அவர் சொன்னார், "இன்னொருவர் என்றால் நான் வேறுவிதமாக இன்னும் கூடுதலாகக் கிண்டல் பண்ணி யிருப்பேன். நீங்கள் என்றபடியால்தான் திருந்துவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை அளிப்பதற்காக அவ்விதம் எழுதினேன்.

"நீங்கள்மட்டும் மிகுந்த நல்லவரோ? குற்றம் குறைகளே இல்லாதவரோ" என்று கேட்டேன். கோபத்தாற்கேட்பதுபோல இருந்தாலும் அவருடையமனோபாவத்தை அறிவதற்காகவே இதைக் கேட்டேன்.

அவர் மீண்டும் சிரித்துக் கொண்டே சொன்னார். "என்னில் உள்ள பிழைகளை எடுத்துக்காட்டித் திருத்தும்படி நீங்கள் சொன்னால் நான் திருந்துவதற்கு இடம் உண்டு."

அவர் தம்முடைய இருதயத்திலுள்ளதை அப்படியே கொட்டிவிட்டார். எனக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் நான் அதை வெளிக்காட்டவில்லை. கோபத்தால் அவரை எரித்து விடுபவள் போலப் பார்த்துப் பின் வருமாறு சொன்னேன். "நீங்கள் அத்துமீறிச் செல்கிறீர்கள். இது உங்களுக்கு என்னால் இடப்படும் முதல் எச்சரிக்கை. இன்னும் நீங்கள் என்னை அவமானப்படுத்த முயன்றால் உங்கள் மாணவவாழ்க்கைக்கே முற்றுப்புள்ளி என்று நினையுங்கள். அடுத்த முறை இப்படி ஒன்று நடக்குமானால் அதிபரின் முன்னிலையில் நிற்க வேண்டிய நிலை யேற்படும்."

அவர் முகம் சிறுத்து விட்டது. ஐயோ! இது ஒரு பயங்கரச் சோதனை என்பதை நான் அப்போது உணரவில்லை.

அன்று என்மனம் ஏதோ ஒரு பெருங் காரியத்தைச் செய்துவிட்டதாகத் திருப்தியடைந்தது. பெரிய புராணத்திற் கூறப்படும் சாக்கிய நாயனார் என என்னை நினைத்துக் கொண்டேன்.

ஆனால் 'சாக்கியநாயனாரின் பக்தியை ஏற்கும் சக்தி கடவுளுக்குத்தான் உண்டு; சாதாரண மனிதனுக்கு இல்லை; என்றுநான் நினைத்ததேயில்லை.

நான் ஓர் அதிசயப்பிறவி.

## 5

நாகராஜன் வெட்கம் அற்றவர்! இல்லாவிட்டால் நான் இத்தகைய சூடு கொடுத்ததன் பின்னும் மீண்டும் மீண்டும் என்னைப் பார்ப்பாரா?

இதைத்தான் காதலென்று சொல்வார்களோ? 'அன்புடன் பார்க்கும் கண்களுக்கு அரக்கனும் மன்மதனாகத் தோன்றுகிறான்; அன்பில்லாமல் பார்க்கும் கண்களுக்கோ மன்மதன் கூட அரக்கனாகத் தோன்றுகிறான்' என்ற வாக்கியங்கள் என் ஞாபகத்திற்கு வந்தன. இரக்கமற்ற அரக்கத்தன்மை வாய்ந்த என்னை அவர் அன்புக் கண்களாற் பார்த்தார். என் அலட்சியத்தைக் கண்டுங் கூட அவர் மனம் சோர்ந்து விடவில்லை.

நானே பாசாங்காகக் கண்ணை மூடிக்கொண்டு நித்திரை போலக் கிடந்தேன். அவருடைய காதலின் கூக்குரல் என் காதில் விழுந்தபோதும் நான் கண்களைத் திறக்கவில்லை. அவரால் என்னை எப்படி எழுப்பமுடியும்?

நாட்கள் செல்லலாயின. நானும் அவருக்கு ஏமாற்றத்தைத் தவறாது கொடுத்து வந்தேன். என் பெருமையும், கெர்வமும் வளர்ந்துகொண்டே வந்தன. என் புதுமையும் விநோதமும் நிறைந்த காதல் மண்டியிடும் நாகராஜனின் காதலைக் கண்டு விம்மிதத்தால் பூரித்தது; வெற்றி கொண்டு கொக்கரித்தது.

நாகராஜன் என் உள்ள அரியாசனத்தில் வீற்றிருப்பதை நான் விரும்பவில்லை. அதன் காலடியில் கைதியாகக் கட்டிவைக்கவே விரும்பினேன்.

என் மனச்சாட்சி 'இது ஓர் விஷப்பரீட்சை' என்று அலறிக் கொண்டே இருந்தது. நான் அதைக் கவனித்தால்தானே! கெர்வம் மனச்சாட்சிக்கு ஒவ்வொரு சமயத்திலும் வாய்ப்பூட்டு இட்டுக் கொண்டே இருந்தது.

## 6

ஒருநாள் என் அறையிலிருந்து படித்தேன். தனிமையிலிருக்கும்பொழுது போலிப் பாசாங்குகள் எதற்கு? பலாத்காரமாக மடியும் என் ஆசைகளுக்கு ஓர் உருக்கொடுப்பதில் முனைந்திருந்தேன்.

ஒரு கடதாசியில் என் கைகள் என்னையறியாமலே 'நாகராஜன்' 'நாகராஜன்' என்று பல தடவைகள் எழுதின. என் உணர்ச்சி யாவும் அந்தப் பெயரில் கொட்டப் பட்டிருப்பதை யாரறிவார்?

என் பின்னால் 'கலீர்' என்று யாரோ சிரித்தார்கள். நான் திடுக்குற்றேன். நான் எழுதியவைகளை மறைக்க முயற்சித்தேன். ஆனால் தோல்வியடைந்துவிட்டேன். அந்தச் சிரிப்புக்குக் காரணமே நான் எழுதியதாக இருக்கையில், மறைப்பதால் யாது பிரயோசனம்?

திரும்பிப்பார்த்தேன். குறும்புக்கார விமலா நின்றாள். ஏதோ அறிந்துவிட்டவள் போலும், என்னை நேரடியாகக் குற்றவாளியாக்கியதாகவும் தோற்றும் முகத்துடன் நின்றாள் அவள்.

என் முகம் கறுத்துவிட்டது. ஓட்டைக் குடத்திலே தண்ணீரும், விமலாவிடத்தில் இரகசியமும் தங்குவது கிடையாது என்று நினைத்தபோது என்னாற் சகிக்க முடியவில்லை. வரப்போகும் அவமானம், மற்றவர்களாற் சாதாரணமாக எண்ணப்பட்டாலும் என்னால் தாங்கவே முடியாத அவமானம் பயங்கர ரூபம் எடுத்து என் மனக்கண்முன் நின்றது.

நான் அவள்முன் குற்றவாளிபோல் தலைகுனிந்து நின்றேன். ஒவ்வொரு நிமிஷமும் யுகம்போன்றிருந்தது.

"ஆண்களுக்கே அடிபணியாத ஆரணங்கே நாகராஜனை உன்மனம் நாடிய காரணம் என்ன" என்று புதிர்போடும் பாணியில் ஏளனமாகவும் பரிகாசமாகவும் அவள் கேட்டபொழுது என் உயிர் போய்விட்டதுபோல இருந்தது.

நான் சமாளிக்க முயன்றேன். ஒன்றும் நடவாதது போல அவளை விறைத்துப் பார்த்துக்கொண்டு "என்ன கண்டுவிட்டு இப்படித் துள்ளி அடிக்கிறாய்" என்றேன்.

அவள் நான் எழுதிய கடதாசியை எடுத்துக்கொண்டு சிறு குழந்தையைப்போன்று எழுத்துக்கூட்ட ஆரம்பித்தாள். நான் அதை அவள் கையிலிருந்து பிடுங்கிக்கொண்டு "நாகராஜனென்றால் இந்த ஒரு நாகராஜன்தானோ? போடி பைத்தியகாரி" என்றேன்.

'அது 'என்னமோ அம்மா? அல்லியாக இருக்கவேண்டிய நீ ஓர் நாககன்னிகையாக மாற வேண்டி ஏற்பட்டதுதான் துக்கமாயிருக்கிறது" என்றாள் அவள். அந்தக் கிண்டலை இரசிக்க என்னால் முடியவில்லை. கோபமும், பயமும் என்னைப் பிடித்துக்கொண்டன. என்ன செய்வதென்றே விளங்கவில்லை!

"விமலா! என்னில் நம்பிக்கையில்லையா உனக்கு. ஓர் கதை எழுதுவதற்காகக் கதாபாத்திரங்களின் பெயர்களை முதலில் எழுதிக்கொண்டு தொடங்கலாம் என்றிருக்க நீ பிழையாக விளங்கிவிட்டாய்" என்றேன்.

"ஆமாம்! உன் கதையில் நாலு ஐந்து நாகராஜாக்கள் வருகிறார்களோ' என்று கேட்டாள் அவள்.

நான் வாயடைத்துப்போய் நின்றேன். இதற்கு என்ன பதில் சொல்லுவது? நியாயவாதி எதிர்த்தரப்பில் உள்ளவரைக் கேட்கும் கேள்வி போன்றல்லவா விமலா கேட்கின்றாள்?

"நான் நாகராஜனில் எவ்வளவு அலட்சியமாயிருக்கிறேன் என்பது உங்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதானே! வீணாக நீ என்மேல் ஒரு பழியைச் சுமத்துகிறாய்" என்றேன் அழமாட்டாத குறையுடன்.

"நீ சொல்வதைச்சொல்லு. உன்னுடைய சர்வாதிகாரத்துக்கு நாகராஜன் ஒரு போதும் இடம் கொடுக்க மாட்டான். உன் காதல் உன்னுடன் மடியவேண்டியதுதான்" என்று சொல்லிவிட்டு அவள் போய்விட்டாள்.

நான் அன்று முழுவதும் வெளியே வரவில்லை. சுகவீனம் என்றுசொல்லிப் படுக்கையிற் புரண்டு எண்ணாததெல்லாம் எண்ணினேன்.

(தொடரும்)

**பள்ளிக்கூடத் தேவைக்கான:**

| | | |
|---|---|---|
| தினவரவு இடாப்பு | — | 1-50 |
| லீவு ,, | — | -50 |
| 'Q' செடூல் சேட்டிபிக்கற் புத்தகம் | | 1-00 |
| தவணைப்பரீட்சை இடாப்பு (சிறியது) | | 2-50 |
| ,, (பெரியது) | | 3-50 |

விலக்குப் பெற்றுக்கொள்ளலாம்

**சுன்னாகம் : தனலக்குமி புத்தகசாலை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாத்தியக் கோளாறு

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ன்றனர். மழை பொழியாதாயின் இவர்கள் உச்சிவேளையில் நின்றும் குத்திமுறிய வேண்டும். வருணபகவான் சீற்றமுற்ருல் அவர்கள் வெயிலில் நின்று நனையவேண்டும்— சுவாத்தியக் கோளாறு காரணமாகத்தான் அவர்கள் சில சமயங்களில் ஒரு சிரட்டை தேநீருக்காகவும் வேலை செய்து விட்டு வீடு திரும்பவேண்டியிருக்கின்றது.

### சந்தேகப் பிராணிகள்

எங்களது இன்றைய ஆட்சியானது, மக்களின் ஆட்சியாயின் இந்தமாதிரிச் ஸ்ரீ சுவாத்தியம் சேட்டை விடுவதை அது கணமேனும் தாங்கமாட்டாது' ஆனல் சுவாத்திய அவதான நிலையத்து அதிபர் சென்றவருடம் நவம்பர் மாதம் 30-ந் திகதி இரவு இடி முழக்கத்துடன் பொழிந்து கொட்டிய மழையைப்பற்றி என்ன கூறினர் தெரியுமா? "அற்புதமான மழை" என அவர் பத்திரிகைகளுக்கு அறிவித்திருந்தார். அன்று 4½ அங்குல மழை பெய்தது.

இத்துடன் நின்றபாடில்லை. "காலநிலையிற் சந்தேகம்கொள்ள இடமில்லை" என அவர் கூறிய வாசகம், புண்ணிலே புளி பற்றிய மாதிரியல்லவா இருந்தது. இது பொறுப்புள்ள அரசாங்க உத்தியோகஸ்தர் ஒருவரின் கூற்றுகும். எங்கள் அரசாங்கத்துக்குச் சந்தேகம் அதிகரித்திருப்பதால் இடதுசாரி அரசியல்வாதிகள் விடும் மூச்சைத்தானும் சுருக்கெழுத்திற் பதித்துக்கொள்ளும்படி பொலிஸ் புலிகளுக்குக்கட்டளைபிறப்பித்திருக்கின்றது. இத்தனைக்கும் மருடம் இட்டாற்போன்று அவதான நிலையத்து அதிகாரியும் "இப்படியான இடிமுழக்கம் நிகழ்வது சகஜம்" என்று இடித்துரைத்திருக்கின்றார்.

### விசாரணைச் சபை

"இது சகஜம்" என்று கூறும்போது எங்கள் அரசாங்கத்துக்கும் பொதுஜன அபிப்பிராயத்துக்கும் வெகுதூரம் என்பது வெளிப்படை. நாட்டு மக்கள் அனைவரும் (மந்திரிமாரையும் அவர்களின் சகாக்களையும் தவிர்த்து) காலநிலையில் இப்படிக் கோளாறுகள் ஒருபோதும் ஏற்பட்டதில்லையே என்று எரிந்து புகைந்து கொண்டிருக்கையில் அரசாங்கத்தின் ஒலிபெருக்கிமாத்திரம் "இது சகஜம்" என்று கதறிவிடுகின்றது. அதுதான் அரசாங்கத்தின் வடிகட்டிய அபிப்பிராயமாகும்.

இத்தனைக்கும் அரசாங்கம் அசையமாட்டாதாயின் எதிர்க்கட்சியினர் நாட்டுமக்கள்படும் கஷ்டத்தைப் பார்த்து எப்படிப் பொறுத்துக்கொண்டிருப்பார்கள். அவதான நிலைய அதிகாரியின் அபிப்பிராயத்தைக் கவனித்து அரசாங்கம் நடக்குமாயின் ஒன்றும் உருப்படமாட்டாது. இதை விசாரணை செய்து சகல விபரங்களையும் அறிவதற்கு ஒரு விசாரணைச் சபையை நியமிப்பதே முறையாகும்.

### ஆகாய விசாரணை

அதிர்ஷ்ட வசமாக இத்தகைய பொறுப்பு மிகுந்த வேலைகளைச் செய்து முடிப்பதற்கு அதற்கு உகந்த ஆட்கள் எங்களிடம் கைவசம் இருக்கின்றனர். தற்போது வேலையற்ற இரு பழைய மந்திரிமார் வீட்டிற் சும்மா இருக்கின்றனர். விலை மதிக்கவொண்ணுத முத்தாரத்தை இலங்கை மக்களுக்கு வழங்குவதற்காகப் பெரிதும் வருந்தி உழைத்த டொக்டர் கனனங்கரா அவர்கள் இவ்விருவரில் ஒருவர். வித்தகர்களின் மகாநாட்டுக்குச் சென்று ஊர் திரும்பிய ஸ்ரீ ஜோர்ஜ ஈ. டி'சில்வாவும் எங்கள் மத்தியில் உறங்குகின்ருர். இவர் மந்திரியாக இருந்தபோது மழையென்றும் பாராது வெயிலென்றும் பாராது எத்தனையோ வைத்தியசாலைகளை நிறுவி, மக்களைச் சீதோஷ்ண நிலைமைக்குப் பலியாகாதவண்ணம் பாதுகாத்து வந்தார். இவ்விருவர்களையுங் கொண்ட ஒரு விசாரணைச் சபையை ஏற்படுத்திஞல் அவர்கள் காலநிலையின் சேட்டைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான வழிவகைகளைக் கண்டுபிடிப்பார்கள்.

இதை முடிக்குமுன்னர் இன்னும ஒரு வார்த்தை. சுவாத்தியம் எங்களுக்கு ஆகாயத்திலிருந்து கிடைக்கின்றது. ஆகவே, முதலாவதாக ஆலயப்பரப்பை ஆராய்ந்து பார்ப்பதே அத்தியாவசியமாகும். இதற்காக அதி அற்புதமுறையிற் செய்யும் விமானக் கூட்டங்களின் சேவையை விசாரணைச் சபைக்கு உதவுவதே உகந்தது. சிந்தனை சிறகடிப்பதற்கும் உண்மையை நிறுவுவதற்கும் இவை பேருதவியாக இருக்குமல்லவா?

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Jan. 23, 1949 | No. 25




# வ ன ச ஞ் சா ர ம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கை மயில் ஆடும்பொழுது மெய்ம்மறந்த ஆனந்தம் எவர்க்கும் உண்டாகும்.

குளக்கரையில் தோகை மயில் அழகாக ஆடிக்கொண்டிருக்கும்பொழுது, குளக்கட்டில் அழகாக வளைந்து சென்ற அழுத்தமான மருதமரக்கொப்பில் இருந்துகொண்டு ஒரு நிஜமயில் பாடக்கேட்டேன். மயில் ஆடுமேயல்லாமல் பாடமாட்டாதென்பது எனது புத்தக அனுபவம். மயில் பாடுகிறதே என்று ஆச்சரியத்தால் விழித்தேன். 'அக்கினியென்றறியாயோ கற்புடைய மங்கையரை' என்று அழுத்தியது அந்த மயில். திரும்பியோடிவிடலாமா, என்று யோசித்தேன். வனமோகினியாற்ருன் அகப்பட்டுக்கொண்டேன்? காட்டிற் திரியும் மோகினித் தெய்வத்திற்கு சாவித்திரியில் நாரதரின் பாட்டு எப்படித் தெரிய வந்தது?

நெஞ்சு படபடக்கக் கால்கள் கிடுகிடுக்க நின்றேன். சிறிது தூரத்தில் என்னை நோக்கி ஒரு கரடி வந்துகொண்டிருந்தது. எனது நிலைமையை நீங்களே யோசித்துப் பாருங்கள். இன்னும் உயிர் உடலை விட்டுப் பிரியவில்லையென்பது மாத்திரம் எனக்கு நிச்சயமாய்த் தெரிந்தது. இந்த நிலைமையில் மரக்கொப்பில் இருந்த நிஜமயில் கீழே குதித்தது. புன்சிரிப்போடு நீங்கள்தானே புது உபாத்தியார் என்று கேட்டது. என்னுல் ஒன்றும்பேச முடியவில்லை. கறுப்புக் கோட்டும் நீள மீசையுமாக, அந்த நிஜக் கரடி 'போகலாமா அம்மா' என்று கேட்டுக்கொண்டு வந்தது. கரடியும், மயிலும் போய் மறையும் வரையில் கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டு நின்றேன். 'கற்புடைய மங்கையரை அக்கினியென்றறியாயோ' என்ற கானம், பின்பும் என் காதில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

## 5. புலியும், மயிலும்

அன்றிரவு என் சிந்தனையைவிட்டு அந்த நிஜமயில் அகலவேயில்லை. காலையில் எழுந்து என் அறைக்கு வெளியே வந்தேன். என்னை நோக்கி ஒரு புலி வந்துகொண்டிருந்தது. அறைக்கு உள்ளேபோய்க் கதவைப் பூட்டிக்கொள்வதுதான் வழி. நல்லவேளையாக அப்படிச் செய்ய முன் புலிக்குப் பின்னுல் வந்த அந்த நிஜமயிலைக் கண்டேன். புலியும் மயிலும் கூடித்திரியும் தர்ம இராச்சியம் என்று யோசிப்பீர்கள்!

எனது பாடசாலைக் கருகில் நிலம் அளக்கும் சேவையர் கூடாரமடித்திருந்தார். அவரின் பெயர் முத்துக்குமாரு. அவரது சொந்த ஊர் யாழ்ப்பாணத்து நல்லூர் செட்டித்தெரு. அவரது முகமும், முறுக்கிய மீசையும், வெண்தலையும், அவருடைய புலிவரிப் போர்வையும், எனது மனத் திகிலும், அவரைப் புலியென நினைக்கச் செய்தது. அவர் தனது மகளுடன் அங்கே இருந்தார். மகளின் பெயர் வனலட்சுமி, வனங்களில் சஞ்சாரம் செய்பவர் ஆகையினல் தனது மகளுக்கும் வனலட்சுமி எனப்பெயர் வைத்து விட்டார்போலும். சுருக்கமாகக் கூப்பிடுவதற்காக 'வனு' என்று கூப்பிட்டு, அது பின் திரிந்து 'வானு' என்ருகி விட்டது. இனி 'நிஜமயில்' என்னும் எனது பெயரை மாற்றி 'வானு' என்று அவர்கள் பெயரையே வைத்துக் கொள்ளுவோம். முதனுள் கண்ட கரடி அவரின் அத்தியந்த வேலைக்காரன்.

நானும் சேவையரும், மகளும் காலை, மாலைகளில் கூடிச் சம்பாஷிப்பது வழக்கமாகி விட்டது. அவர்களுடைய சம்பாஷணை தந்தையும், மகளும் போலல்லாது, நண்பர்கள் மாதிரி இருந்தது. எதையும், வெளிதிறந்து தெளிவாகப் பேசினுர்கள். (தொடரும்)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் கா. பொன்னையா அவர்களால் சுன்னுகம் திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ ஜனவரி மீ 23உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org